வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 29.08.2022 திங்கட்கிழமை இதழ் : 265 பக்கங்கள் : 16




# பரிவர்த்தனைப் பணமாக இந்திய ரூபாய் வாய்ப்பை தமிழர் பயன்படுத்த வேண்டும்!

## ரெலோ கட்சியின் சுரேந்திரன் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஓக. 29

சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களுக்கான பரிவர்த்தனை நாணயமாக இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை வர்த்தக, முதலீட்டு, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக்கான பாதையாக எமது சமூகம் கையாள வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன்.

இது தொடர்பில் நேற்று அவர் அனுப்பி வைத்த விசேட செய்திக் குறிப்பில்,

சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கான பரிவர்த்தனை நாணயமாக இந்திய ரூபாய் மத்திய வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை இதை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இனிமேல் இலங்கையில் உள்ள ஏற்றுமதியாளர்கள் - இறக்குமதியாளர்கள் உத்தியோகபூர்வமாக வங்கிகளில் இந்திய ரூபாயை பயன்படுத்தி தங்களுடைய அந்நிய செலாவணி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

டொலர், பவுண்ஸ் மற்றும் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்விகள் அதிகமாக இருப்பதாலும், வங்கிகளில் இந்த நாணயங்களின் இருப்புக்கள் இல்லாமையாலும் ஏற்றுமதி, இறக்கு

15

# எமது பிரச்னைக்கு தீர்வு காண இந்தியாவை அழைக்கக்கூடாது!

- தமிழருக்கு இன ரீதியான பிரச்னை இல்லை!
- படைகளுக்கும் பொது மன்னிப்பு வேண்டும்
- காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இழப்பீடு
- போரில் இறந்தோருக்கு பொது நினைவுதினம்

## ஈ. பி. டி. பி. டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 29

எமது பிரச்னையை நாமே தீர்த்துக் கொள்ளவேண்டும். மாறாக அதற்குத் தீர்வு காண்பதற்கான மருத்துவிச்சியாக பிரதமர் மோடியை அழைக்கமுடியாது - இப்படி தெரிவித் திருக்கிறார் ஈ. பி. டி. பி. என்றறியப்பட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா.

15

## பலாலியிலிருந்து விமான சேவை ஆரம்பிக்கிறது எயார் இந்தியா!

கொழும்பு, ஓக. 29

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் விமான சேவையை எயார் இந்திய நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

எயார் இந்தியா நிறுவனம் அடுத்த மாதம் தொடக்கம் வாரத்தில் இரு தடவைகள் சேவைகளை நடத்த யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

75-90 ஆசனங்களைக் கொண்ட

15

## க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின!

கொழும்பு, ஓக. 29

2021ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று பிற்பகல் வெளியாகின.

பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk

15

## யாழ். இந்து கல்லூரி மாணவன் உயிரியல் பிரிவில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவன் சிவகோணேசன் சிவாம்சன் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

15

## உயிரியலில் தேசிய மட்டத்தில் மட்டு. மாணவன் முதலிடம்!

மட்டக்களப்பு, ஓக. 29

கடந்த வருடம் நடந்த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவன் தமிழ்வாணன் துவாரகேஷ் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றார்.

15

## யாழ். இந்துக் கல்லூரியில் 41 மாணவர்களுக்கு 3 ஏ

யாழ்ப்பாணம், ஓக. 29

நேற்று வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை சேர்ந்த 41 மாணவர்கள் 3 சித்தியை பெற்றுள்ளனர். அத்துடன், 20 மாணவர்கள் 2ஏ, பி சித்தியை

15

## யாழ். மத்திய கல்லூரி மாணவன் கணித பிரிவில் யாழில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் ஞானமூர்த்தி சூரியா கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

15

## மீசாலை வீரசிங்கம் மத்தியில் 12 மாணவர்களுக்கு 3ஏ பெறுபேறு

தென்மராட்சி, ஓக. 29

கடந்த வருடம் நடந்த உயர்தரப் பரீட்சையில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் 12 மாணவர்கள் 3 ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

15

## பாதுகாப்பு வழங்காததாலேயே கோட்டாபய நாடு திரும்பவில்லை!

### மனித உரிமைகள் குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 29

பாதுகாப்பு வழங்கப்படாததாலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்ப முடியாமல் இருக்கிறார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

15

## கோட்டாபயவுக்கு அதிகாரபூர்வ இல்லம்!

### அரசு முடிவு ஆனால், ரணில் பின்னடிப்பு!

கொழும்பு, ஓக. 29

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிகாரபூர்வ இல்லம் ஒன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், இதற்கு அனுமதி வழங்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்னடிக்கிறார் என்று கூறப்படுகின்றது.

தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள்

15

## இப்படியும் நடக்கிறது...!

புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் முதலிட வேண்டும் என்ற கோரிக்கையை இன்று பலரும் தொடர்ந்து விடுத்து வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துவரும் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள்தான் இன்று அதனை நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றக்கூடியது.

இந்த நிலையிலேயே கோட்டாபய ராஜபக்ஷகூட இது போன்ற அறிவிப்பை விடுத்திருந்தார். பின்னர் ஆட்சிக்கு வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் இதேபோன்ற அழைப்பை விடுத்ததுடன், புலம்பெயர்ந்தோர் நலனைக் கவனிக்கவும் அவர்களின் உதவிகளைப் பெறுவதை முன்னிறுத்தியும் கொழும்பில் தனியான அலுவலகம் ஒன்று திறக்கப்படவிருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்புக்களையடுத்து, கொழும்பில் சிலர் தாங்களே புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு அரசியல் செய்யத் தொடங்கியிருப்பது பற்றியும் இந்தப் பத்தியில் விவரமாக எழுதியிருந்தேன்.

இப்போது போதாக்குறைக்கு புலம்பெயர் தமிழர்களும் அந்தப் போட்டியில் குதித்திருப்பதை காணமுடிகின்றது.

இதன் ஓர் அங்கமாக கனடாவிலிருந்து தங்களை நீதி மற்றும் சமத்துவத்துக்கான அமைப்பு என்று அறிமுகம் செய்துகொண்டு சிலர் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இணையவழியில் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

இந்தப் பேச்சில் அவர்கள், “தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யவேண்டும் என்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியும் பொலிஸாரின் அச்சுறுத்தலும் நிறுத்தப்படவேண்டும் எனவும் இந்த இரண்டு செயல்பாடுகளும் தமிழ் - சிங்கள மக்களின் நல்லுறவுக்கான அடையாளமாக சிங்கள அரசு காட்டுமிடத்து தொடர்ந்து தமிழ் - சிங்கள மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கான அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியும்” என்றும் அவர்கள் அரசுக்கு தெரிவித்திருக்கின்றனர் என்று அவர்களே செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

இந்த இரண்டு விடயங்களையும் அரசாங்கம் செய்தால் அடுத்த கட்டத்துக்கு அந்தப் பேச்சுக்களை கொண்டுசெல்ல முடியும் என்று, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பில் சொல்வதற்கான உரிமையை இவர்களுக்கு யார் கொடுத்தது என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

முதலில் அரசாங்கம் இப்போது எதிர்பார்ப்பது புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் முதலிடுவதைத்தான். அதற்காக இதுபோன்ற சில கோரிக்கைகளை நிறைவேற்றினால், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிடுவார்கள் என்று சொல்வதற்கு இந்தப் பேச்சில் கலந்துகொண்டவர்கள் கொடுக்கின்ற உத்தரவாதத்தை நம்புகின்ற அளவுக்கு இலங்கை அரசாங்கம் இன்று இருந்துகொண்டிருக்கின்றது என்பது எத்தனை புத்திசாலித்தனமானது?

ஏற்கனவே பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் இதுபோன்ற கோரிக்கைகளை விடுத்து, அதற்கான உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே ரணிலுக்கு ஆதரவளித்திருந்தார். அவர் வெற்றிபெற்ற பின்னர், விக்னேஸ்வரன் தனக்கு உறுதியளித்ததுபோல முதலில் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இந்த கோரிக்கை இன்னமும் கிடப்பிலேயே இருக்கின்றது.

இந்த நிலையில் தங்களை புலம்பெயர்ந்தோர் பிரதிநிதிகளாகக் கூறிக்கொண்டு சில தனிநபர்கள் இதுபோன்ற கோரிக்கைகளை விடுப்பது அந்த விவகாரத்தையே கேலிக்குரிய தாக்கிவிடும்.

அதுமாத்திரமல்ல, நீதி அமைச்சருடன் பேச்சு நடத்தியவர், கோட்டாபயமீது அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்த றோய் சமாதானம் என்பவர். யுத்தகாலத்தில் கனடாவிலிருந்து கொழும்புக்கு வந்திருந்தபோது சில தொலைத்தொடர்பு சாதனங்களை புலிகளுக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானவர். அதுபற்றியே அவர் கோட்டாபயமீது அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இப்போது அவர் அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தானாக முன்வந்திருக்கிறார் என்பது தெரிகின்றது. அப்படியெனில், அவர் அரசாங்கத்துடன் பேசுகின்றபோது அவரிடமிருந்து அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடியது என்ன என்பது இரகசியமானதல்ல. கோட்டாபய இப்போது ஆட்சியில் இல்லை என்றாலும், அவரின் கட்சியினரே இப்போதும் அதிகாரத்தில் இருக்கின்றனர். அப்படியிருக்கையில் அந்த வழக்குத் தாக்கல் செய்தவர் என்ற ஒரேயொரு “தகுதி“யோடு, அவர் அரசாங்கத்துடன் பேச முற்படுவதும், கைதிகள் விடுதலையையும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தையும் சுமுகமாக தீர்த்துவையுங்கள் தொடர்ந்து புலம்பெயர் தமிழர் சார்பில் பேசலாம் என்பதும் பல கேள்விகளை உருவாக்குகின்றன.

நிலைமை இப்படியே போனால் புலம்பெயர் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு இனி பலரும் கிளம்பத் தொடங்கிவிடுவார்கள்.

இது ஆரம்பத்திலேயே சீர்செய்யப்படவேண்டிய ஒன்று.

**- ஊர்க்குருவி.**

# சர்வகட்சி அரசை அமைப்பது வெறும் கனவாகவே இருக்கும்!

**சமிந்த விஜயசிறி எம்.பி**

கொழும்பு, ஓக. 29

பழைய விளையாட்டுக்களை விளையாடுவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது என்பது வெறும் கனவாக மட்டுமே இருக்கப்போகின்றது என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பார் என்று மக்கள் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். பிரச்னைகளை தீர்ப்பதற்கான திட்டங்கள் இந்த அரசாங்கத்திடம் உள்ளதா என்றால் அது கேள் விக்குறியே.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்பு பிரச்னைகளை தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கூறியிருந்தார். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்க கூறிய விடயத்தை மக்கள் நன்கு புரிந்துகொண்டது மட்டுமன்றி நாட்டின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது.

எனினும் அவர் தனது அரசியலை நிலைநிறுத்திக்கொள்வதற்காக முன்மொழிந்த ஒரு விடயமாகவே சர்வகட்சி அரசாங்கம் என்ற விடயம் அமைந்துள்ளது. ஜனாதிபதியால் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது. அதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி அங்கம் வகிக்கும் ஆளும்கட்சியிலேயே சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் இழுபறி நிலை, முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பது மக்களின் கனவாகும். அந்த கனவு நனவாகப் போவதில்லை.

அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, சர்வகட்சி வேலைத் திட்டத்தில் நாமும் பங்குதாரர்களாகி நாடு எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சித்தோம். எனினும் அந்த முயற்சி பலனிக்கவில்லை - என்றார். (கே)

## ஆளும் கட்சியின் கூட்டம் இன்று

கொழும்பு, ஓக. 29

ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பு இன்று மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (ஐ)

# காற்றாலை மின்சார திட்டத்தால் எந்தப் பாதிப்புக்களும் ஏற்படாது!

**காதர் மஸ்தான் எம். பி.**

வவுனியா, ஓக. 29

காற்றாலை மின் நிலையம் சம்பந்தமாக மக்களின் எதிர்ப்புகளை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம். ஆனால், காற்றாலை எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிற எந்த திட்டங்களையும் நாட்டுக்குள் கொண்டு வர மாட்டோம் - இவ்வாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எங்கெங்கு காற்றாலை அமைக்கப் பொருத்தமான இடங்கள் இருக்கின்றனவோ, அந்த இடங்களை பார்த்துத்தான் காற்றாலைகளை அமைத்திருக்கிறோம் என்று தங்களுக்கு உயர் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுளார்.

காற்றாலை திட்டத்தின் விரிவுபடுத்தலுக்கு எதிராக மன்னாரில் தொடர்ச்சியாக இடம்பெறும் போராட்டங்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தொடர்ச்சியாக நான் மாத்திரமல்ல இங்குள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் நடக்கின்ற அதி உயர் கூட்டங்களில் இந்த காற்றாலை பிரச்னை தொடர்பாக தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த காற்றாலை அமைக்கப்படுவதால் இப்பொழுதும் எதிர்காலத்திலும் பெரிய பாதிப்பு இல்லை என்றே சொல்லப்படுகிறது.

ஆனால், மக்கள் தொடர்ச்சியாக அதற்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

வரும் வாரத்தில்கூட பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிகிறேன். இதை எல்லாம் நாங்கள் உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்ல இருக்கிறோம். அதே நேரம் மக்களுடைய நிலைப்பாட்டையும் உயர் மட்டத்துக்கு வெளிப்படுத்துகிறோம். அதோடு காற்றாலை விடயத்தில் நாங்கள் மக்களுடன் இருப் போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றார். (ஐ)

# இராணுவத்தினர் அமைத்த வீடு படை தளபதியால் கையளிப்பு!

வடமராட்சி, ஓக. 29

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் விஸ். நடராஜாவின் நிதிப் பங்களிப்பில் இலங்கை இராணுவத்தின் 551ஆவது படைப் பிரிவின் ஆளணியால் கட்டப்பட்ட வீட்டை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே உரியரவ்களிடம் கையளித்தார்.

குறித்த நிகழ்வு வடமராட்சி வடக்கு புலோலி கிழக்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவருக்கே இராணுவ தளபதியால் இந்த வீடு கையளிக்கப்பட்டது.



இந் நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜய சுந்தர, 55ஆவது படை பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் குணரட்ண, 551ஆவது படை பிரிவின் தளபதி பிரிகேடியர் சிந்திக்க விக்கிரமசிங்க, 552 பிரிகேடியர் ஜெயவீர, வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, பருத்தித்துறை நகர சபை தவிசாளர் யேசுராசா இருதயராசா, வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் எனப் பலர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின்போது அந்த கிராமத்தை சேர்ந்த பத்துப் பேருக்கு உலர் உணவு பொதிகளும், பாடசாலை மாணவர்கள் மூவருக்கு மாதாந்த கொடுப்பனவாக 5,000 ரூபாயும், 10 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

(ஐ-2)

ஈழநாடு
Eelanadu
29.08.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியாவின் கையிலுள்ள பிரமாஸ்திரம்?

இலங்கையை அருகிலிருந்தும் தொலைவிலிருந்தும் சில நாடுகள் துன்புறுத்திவருகின்றன என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்திருக்கின்றார். சீனத் தூதுவர் நாடுகளின் பெயர்களை குறிப்பிடாவிட்டாலும்கூட அவர் இந்தியாவையும் அமெரிக்காவையும்தான் குறிப்பிடுகின்றார் என்பதை புரிந்துகொள்வது சுலபமானது. இதற்கு பதிலடியாக இலங்கைக்கு இப்போது தேவை உதவியே தவிர, தேவையற்ற அழுத்தங்கள் அல்ல - என்று குறிப்பிட்டிருக்கும் இந்திய தூதரகம், சீனத் தூதுவர் இராஜதந்திர சம்பிரதாயத்தை மீறி செயல்பட்டிருப்பதானது அவரின் தனிப்பட்ட பண்பாக இருக்கலாம் அல்லது அவரிந் நாட்டின் அணுகுமுறையாக இருக்கலாமென்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்திருக்கின்றார்.

சீனாவின் உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கிய விடயத்தை தொடர்ந்து, புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட தெரிவித்திருக்கின்றார். சீனாவின் உளவுக் கப்பலை அனுமதித்தால் அது பிராந்தியத்தில் பதற்றங்களை அதிகரிக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றாகும். இந்த நிலையில், மிலிந்த மொறகொடவுடன் கலந்துரையாடாமலா கோட்டபாய ராஜபக்ச இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்திருந்தார்? அல்லது மொறகொடவுடனும் கலந்துரையாடித்தான் இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டிருந்ததா? ஏனெனில், சீன கப்பல் விவகாரம் - ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பதற்கு முன்பாகவே எடுக்கப்பட்ட தீர்மானமென்றே கூறப்பட்டது.

இலங்கை மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற நிலையில், இலங்கையை மையப்படுத்திய புவிசார் அரசியல் போட்டிகளும் தீவிரமடைவதான தோற்றமொன்றே தெரிகின்றது. 2014இல் கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கிகள் நங்கூரமிடப்பட்ட விவகாரம் புதுடில்லியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நேரடியாகவே களத்தில் இறங்கியிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2015இல் ஆட்சி மாற்றமொன்றும் ஏற்பட்டது. இப்போது சீன உளவுக் கப்பல் விவகாரம் மீளவும் இந்தியாவின் புவிசார் கரிசனைகளை தூண்டிவிட்டிருக்கின்றது.

இவ்வாறான பிரச்னைகள் அடிக்கடி நிகழக்கூடியதொரு, சிக்கலான அரசியல் சதுரங்கத்துக்குள் இலங்கை சிக்கிவிட்டதா? இந்த பிரச்னையை இந்தியா எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது? இந்தியாவின் புவியியல் அருகாமை அதன் பலமாக இருந்தாலும்கூட, இவ்வாறான சீனத் தலையிடிகள் தொடருமாக இருந்தால், அது இந்தியாவுக்கு ஏதோவொரு வகையில் தலையிடியாகவே அமையலாம். இதனை சமாளிப்பதற்கு இலங்கை தொடர்பான இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் மாற்றமொன்று அவசியமாகும். இலங்கைத் தீவை ஒரு நட்புநாடாக கருதியே இந்தியா அதன் கொள்கையை திட்டமிடுகின்றது. இதுவரையில் இதுதான் நடைமுறையாக இருக்கின்றது. ஆனால், இந்த நடைமுறையால் இலங்கையை முற்றிலுமான நட்புநாடாக பேணிப்பாதுகாக்க முடிந்ததா என்னும் கேள்வியுண்டு. கொழும்பின் அணுமுறையானது எப்போதும் ஓர் அரை நட்புநாடு என்னும் நிலையிலேயே இருப்பதாகத் தெரிகின்றது. இந்தியாவை ஓர் அரை வழி நண்பனாகவே சிங்களவர்கள் கருதுகின்றனர். காதலும் வெறுப்பும் என்னும் அடிப்படையில்தான் கொழும்பு இந்தியாவை அணுகிவருகின்றது.

இந்த இடத்தில் ஈழத் தமிழர் பக்கத்திலும் சிக்கல்கள் உண்டுதான். ஈழத் தமிழர்கள் மத்தியிலும் இந்தியாவை எதிர்க்கும் சந்தேகிக்கும் சிங்களவர்கள் போன்றே - காதலுடனும் வெறுப்புடனும் அணுகும் தமிழ் தேசிய குழுக்கள் உண்டுதான். அதனை மறுக்க முடியாது. ஆனால், கொழும்பை போன்று இந்தியாவுக்கு விரோதமான விடயங்களை முன்னெடுக்கக்கூடிய ஒரு சமூகமாக ஈழத்தமிழர்கள் இருக்கப்போவதில்லை. இதேவேளை, தமிழ் நாட்டின்மீதான ஈர்ப்பால் இந்தியாவுடன் நிற்பதை தவிர, வேறு தெரிவுகள் ஈழத் தமிழர்களுக்கு முன்னால் ஒருபோதுமே இருக்கப் போவதில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், இலங்கையை எக்காலத்திலும் கையாள்வதற்கான பிரமாஸ்திரமாக இந்திய - இலங்கை ஒப்பந்தமே இருக்கின்றது. அது தமிழ் மக்களின் பெயரால் இடம்பெற்ற ஒப்பந்தமாகும். ஆனால், அதன் பிரதான அங்கமான, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இப்போதும் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு விடயமாகவே இருக்கின்றது. இது தொடர்பில் இந்தியா தீர்க்கமான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். அது வழமையான அணுகுமுறைகளாக இருக்கக்கூடாது.

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு எவரும் கருணை காட்டுவதில்லை!

நுவரெலியா, ஓக. 29

இலங்கையில் பதவிக்கு வரும் அனைத்து ஜனாதிபதிகளும் பொது மன்னிப்பை வழங்குகின்ற போதிலும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அவர்கள் கருணை காட்டுவதில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணி குற்றஞ் சாட்டியுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்து வந்த ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்ட பின்னணியில் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதகிருஷணன் இதனைக் கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் அரசியல் கைதிகள் அல்லது போராளிகள் 20 தொடக்கம் 25 ஆண்டுகளை தடுப்பு காவலிலேயே கழித்துள்ளனர். அவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் எண்ணம் தற்போதைய ரணில் அரசாங்கத்துக்கு மாத்திரமல்ல கடந்த காலத்தில் இருந்த எந்தவோர் அரசாங்கத்துக்கும் இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக ஒவ்வோர் அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளிக்கின்ற போதிலும் அதனை ஒருபோதும் நிறைவேற்றியதில்லை.

ரணில் விக்ரமசிங்க மாத்திரமல்லாமல், கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் பொது மன்னிப்பின் கீழ் சிலரை விடுதலை செய்துள்ளனர். ஏன் நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அல்லது போராளிகளை விடுவிக்க முடியாது?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி எந்தவோர் அமைச்சு பதவிகளையும் பெற்றுக்கொள்ளாது எனவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# அடையாளம் காண உதவுமாறு மக்களை கேட்கிறது பொலிஸ்!

கொழும்பு, ஓக. 29

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களை கைதுசெய்ய உதவுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

சந்தேக நபர்களின் புகைப்படங்களையும் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி போராட்டக்காரர்கள் என்ற பெயரில் ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தவர்களை கைதுசெய்வதற்காக கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளுக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்பட்ட காணொலிகள், புகைப்படங்களுக்கு அமைவாக சந்தேக நபர்களை இனங்காண்பதற்கு உதவுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் பொதுமக்களை கோரியுள்ளனர்.

புகைப்படங்களில் காண்பிக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல் தெரியுமாயின் அதனை தெரியப்படுத்துவதற்கான அவசர கைபேசி இலக்கம் தொலைபேசி மற்றும் வட்ஸ் அப் இலக்கங்களை பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக 011-2083049 என்ற தொலைபேசி இலக்கம், 075-6371563 என்ற வட்ஸ் அப் இலக்கம் அல்லது 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு தகவல் தருமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் பொதுமக்களை கோரியுள்ளது. (கே)

# கடதாசி செலவை கட்டுப்படுத்த பொது நிர்வாக அமைச்சு முடிவு!

கொழும்பு, ஓக. 29

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆண்டுதோறும் கணிசமான பணத்தை சேமிக்க தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பதற்கு அரச அதிகாரிகள் பயன்படுத்தும் ஏ4 அளவைவிட பெரிய 4 பக்க விண்ணப்ப படிவத்தை ஏ4 தாளில் 2 பக்கங்களாக குறைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.


அரச சேவையில் அமுல்படுத்தப்படும் சிக்கன கொள்கையின் அடிப்படையில் விடயதான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைய இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்தார்.

இதன்மூலம், விண்ணப்ப படிவத்துக்கான காகித செலவில் சுமார் 50 சதவீதம் சேமிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் வெளிநாடு செல்ல விண்ணப்பிக்கும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருப்பதால், காகிதம் மற்றும் பணத்தை அரசாங்கத்தால் சேமிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே இருந்த விணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் புதிய படிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பங்களை அச்சடிப்பதற்கு அரச அச்சகத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 29 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 13
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவிதியை




**மேடம்**
விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் சலசலப்பு ஏற்பட்டு மறையும். அந்நியர்களை நம்பி ஈடுபடும் முயற்சி வீணாகும்.

**இடபம்**
வம்பு, வழக்குகளில் எதிர்மறை பலன்கள் ஏற்படலாம். மற்றவர் பிரச்னையில் தலையிட வேண்டாம். மகிழ்ச்சியான செயல்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவுகளால் ஆதாயம் தோன்றும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பொருளாதார நெருக்கடி விலகும். பழைய கடன் பைசலாகும். புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். எதிர்பாராத வருமானத்தை அடைவீர்கள்.

**கடகம்**
வார்த்தைகளில் கவனம் தேவை. பணம், நகைகள் விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். உங்கள் செயல்க ளில் நிதானம் அவசியம். குடும்பத்தினரால் சில நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**
புதிய எண்ணம் உருவாகும். ஆசை அதிகரிக்கும். தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் முயற்சி பாதகமாகும். எதிரிகள் பலம் பெறுவர். முயற்சிகளில் தடை உண்டாகி உங்களை சங்கடப்படுத்தும்.

**கன்னி**
செலவு அதிகரிக்கும். எதிர்பாராத பயணம் ஏற்படும். உங்கள் செயல் விடாமுயற்சியால் நிறைவேறும். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். வருவாய்க்கு மிஞ்சிய செலவு ஏற்படும்.

**துலாம்**
முயற்சிகள் வெற்றியாகும். அடிப்படைத் தேவை நிறைவேறும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நண்பர்களிடம் கவனம் தேவை. பண வரவில் இருந்த தடைகள் நீங்கும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் முடிவிற்கு வரும். உங்கள் அனுகுமுறையால் உறவினர் ஆதரவு கூடும்.

**தனுசு**
இருப்பிடத்தை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் எண்ணங்கள் நிறைவேறி மகிழ்வீர்கள். உங்கள் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். நினைத்ததில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
கவனமாக செயல்பட வேண்டிய நாள். முயற்சி இழுபறியாகும். மனதைப் பாதிக்கும் வகையில் இன்று சில சம்பவங்கள் நடக்கலாம். அறிமுகம் இல்லாதவரை நம்பி செயலில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்**
பழைய பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். எதிர்பார்த்த வரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களிடம் ஏற்பட்ட பகை விலகும். உங்கள் திறமை இன்று வெளிப்படும்.

**மீனம்**
கோயில் தரிசனம் மகிழ்ச்சி தரும். முயற்சி நிறைவேறும். சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். தேவைக்காக கடன் வாங்குவீர்கள். உங்களுடன் இருப்பவர்களால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். வார்த்தைகளில் கவனம் செலுத்துவது நல்லது.

# இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்து மீனவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

இராமேஸ்வரம், ஓக. 29

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேரையும் உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இன்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.




மீனவர்களின் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் இராமேஸ்வரத்தில் உள்ள சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் இலங்கை அரசின் கைது நடவடிக்கையை கண்டித்து இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பாக நேற்று திடீரென கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் நேற்று அனைத்து மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் சனிக்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்க சென்ற நிஷாந்த் என்பவருக்கு சொந்தமான ஒரு படகையும் அதிலிருந்த 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் அழைத்து சென்றனர்.

இலங்கை கடற்படையின் இந்த கைது நடவடிக்கை யை கண்டித்து உடனடியாக மீனவர்கள் படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நாளை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட போவதாக முடிவு செய்தனர்.

மேலும் கிடப்பில் போடப்பட்டுள்ள இலங்கை - இந்திய மீனவர் பேச்சை மீண்டும் நடத்த மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினர்.

இராமேஸ்வரம் மீனவர்கள் இந்த வேலை நிறுத்தத்தால் மீனவர்கள் மற்றும் மீன்பிடி சார்பு தொழிலாளர் என சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பை இழப்பர். அத்துடன், நாளொன்றுக்கு 50 இலட்சம் (இந்திய) ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# கோயில்களில் செப். 3முதல் தாய் தமிழிலேயே வழிபாடு!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஓக. 29

“தமிழ் வழிபாட்டு உரிமையைக் கோர உந்தும் வகையில், நாம் தமிழர் கட்சியின் தமிழ் மீட்சி பாசறையும், வீரத்தமிழர் முன்னணியும் இணைந்து வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி முதல் தமிழ்நாடு முழுவதும் “தாய்த்தமிழில் வழிபாடு” நிகழ்வை முன்னெடுக்கிறது” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.



இதுதொடர்பாக கட்சி தொண்டர்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கை: “அன்னைத் தமிழில் அர்ச்சனை” என்ற பெயரில் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு ஒரு திட்டத்தை அறிவித் தது. இதன்படி இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்துக் கோயில்களிலும் தமிழில் வழிபாடு (அர்ச்சனை) செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் நாம் அறிந்த வரை இந்தத் திட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நாடு “தமிழ்”நாடு. ஆனால், தமிழில் வழிபாடு செய்யப் போராட வேண்டிய நிலையிலதான் கடந்த 55ஆண்டுக் காலத் திராவிட அரசுகள் இயங்கி இருக்கின்றன. இந்நிலையை மக்களுக்கு எடுத்துரைக்கவும், மக்களும் தமிழ் வழிபாட்டு உரிமையைக் கோர உந்தும் வகையில், நாம் தமிழர் கட்சியின் தமிழ் மீட்சிப் பாசறையும், வீரத்தமிழர் முன்னணியும் இணைந்து தமிழ்நாடு முழுவதும் “தாய்த் தமிழில் வழிபாட்டை” முன்னெடுக்கிறது.

இந்து அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு முதன்மைக் கோயிலுக்குத் தத்தம் குடும்பங்களுடன் சென்று தமிழில் வழிபாடு செய்யக் கோரி, கோயில் பொறுப்பாளர்களையும் (நிருவாகத்தையும்) பூசாரிகளையும் நடைமுறையில் தமிழ் வழிபாட்டைச் செய்ய வைக்க வேண்டும்.

இதனை, தமிழுக்காக 1965-இல் பெரும் மொழிப்போரை முன்னின்று நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனாரின் நினைவு நாளான செபரெம்பர் 3ஆம் நாளன்று தமிழ்நாடு முழுவதிலும் முன்னெடுப்போம் - என்று கூறியுள்ளார். (ஐ)

# ராகுல் காந்தி நடைபயணத்துக்கு 10 இலட்சம் பேரை திரட்ட திட்டம்!

விருதுநகர், ஓக. 29

ராகுல் காந்தி நடைபயணத்துக்கு 10 இலட்சம் பேரை திரட்ட திட்டமிட்டுள்ளோம் என தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கன்னியாகுமரியில் செப்.7-ல் பாத யாத்திரையை தொடங்குகிறார். இதுதொடர்பாக விருதுநகர், மதுரை மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விருதுநகரில் நடந்தது.

இதன்போது அழகிரி, “காஷ்மீர் வரையிலான நடைபயணத்தை ராகுல் காந்தி வரும் 7ஆம் திகதி கன்னியாகுமரியில் தொடங்குகிறார்.

பா. ஜ. கவின் தவறான அரசியல், பொருளாதார கொள்கையை வெளிப்படுத்தவும், நாட்டில் நிலவும் அமைதியின்மை, மக்களை பிரிக்கும் சித்தாந்தத்துக்கு எதிரான சித்தாந்தத்தை கையில் எடுத்துதான் ராகுல் நடைபயணத்தை மேற் கொள்கிறார். இதற்காக 10 இலட்சம் பேரை திரட்ட திட்டமிட்டுள்ளோம் - என்றார். (ஐ)

# மாறிமாறி ஆட்சியேற்கும் அரசுகள் தீர்வைக் காலம் கடத்துகின்றன!

## கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

கொழும்பு, ஒக. 29

**“மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

வார ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது: “நாங்கள் அரசியல் தீர்வு விடயம் சம்பந்தமாக அரசுடன் மாத்திரமன்றி ஏனைய தரப்புக்களுடனும் பேசியிருக்கின்றோம். இது தொடர்பான எமது நடவடிக்கை தொடர்கின்றது. நாட்டின் தேசிய பிரச்னைகளில் அரசியல் தீர்வு விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சரித்திர ரீதியான தாயகம். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அவர்களின் வதிவிடப் பிரதேசம். எனவே, தமிழ் பேசும் பிரதேசம் ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கில் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்.

இந்தக் கருத்து எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு - வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அது சில காரணங்கள் நிமித்தம் இழுபடுகின்றது.

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இந்த விடயம் தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.

காலம் தாழ்த்தாமல் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இது தொடர்பில் அனைத்துத் தரப் பினருடனும் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். இந்த விடயத்தில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும்” - என்றார். (ஐ)



# பருத்தித்துறை பொலிஸாரால் நடமாடும் சேவை நடத்தப்பட்டது

வடமராட்சி, ஒக. 29

பொலிஸ் திணைக்களத்தின் 154ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் நடமாடு சேவை ஒன்று நடத்தப்பட்டது.

குடத்தனை வடக்கு அ. மி. த. கஇபாடசாலையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்மால்கொடவின் வழிகாட்டலில் , பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த சமரசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

இதில் பொது மருத்துவ, கண் பரிசோதனைகளும் மூக்கு கண்ணாாடி வழங்கலும் இடம்பெற்றன. அத்துடன், பொது மக்களுக்கான பொலிஸ் சான்றிதழ் வழங்கலும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் ஏராளமானவர்கள் நன்மைகளைப் பெற்றனர். (ஐ-2)

# மானிப்பாயில் அடாவடி மோ. சைக்கிள் தீக்கிரை!

மானிப்பாய், ஒக. 29

மானிப்பாயில் நேற்று அதிகாலை வீடு ஒன்றின்மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீட் டின்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டுக்குள் அத்துமீறி உள்நுழைந்த கும்பல் ஒன்று வீட்டு யன்னல்கள் மற்றும் கதவுகளை உடைத்து விட்டு, அங்கு நின்ற மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றது. இதில், மோட்டார் சைக்கிள் முற்றாகவே எரிந்து நாசமானது.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 3 -5)

# தேசிய கிறிஸ்தவ பேரவை தலைவராக பேராயர் டானியல் தியாகராஜா தெரிவு

கொழும்பு, ஒக. 29

இலங்கை தேசிய கிறிஸ்தவ பேரவையின் தலைவராக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா ஏகமனதாக தெரிவானார்.

இலங்கை தேசிய கிறிஸ்தவ பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு அங்கிலிக்கன் மறை மாவட்டத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.



தேசிய கிறித்தவ மன்றத்தின் ஊழியர்கள் நடத்திய வழிபாட்டில், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா இறுதி ஆசி வழங்கினார்.

இக்கூட்டமானது, தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைவரான மெதடிஸ்த திருச்சபை தலைவர் அருட்தந்தை எபினேசர் யோசேப் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, 2022-2023 ஆம் ஆண்டிற்கான தேர்தல்கள் நடத்தப்பட்டது. இதில், பேரவையின் தலைவராக பேராயர் டானியல் தியாகராஜா தெரிவானார்.

துணைத் தலைவர்களாக கிறிஸ்தவ சீர்திருத்த தேவாலயங்களின் தலைவர் வண. பிதா ஷெர்லி பேபர் மற்றும் பேக் டு த பைபிள் அமைப்பின் மருத்துவர் மயூகா பெரேராவும் தெரிவாகினர்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வணக்கத்திற்குரிய டானியல் தியாகராஜா தனது பதவிக்காலத்தில், இரண்டாவது தடவை தலைமை ஏற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்துடன் இலங்கை திருச்சபை (அங்கிலிக்கன்), மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை (சி.எஸ்.ஐ.), இலங்கை பெப்டிஸ்ட் திருச்சபை, பிரஸ்பெற்றேரியன் திருச்சபை, இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை (சி. ஆர்.சி.), லங்கா லூதரன் சபை, இரட்சணிய சேனை ஆகிய சபைகள் உறுப்புரிமையைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழரின் வெளிவிவகாரம் யதார்த்தம் புரியாதவர்களால் கையாளப்படுகிறது

## முன்னாள் எம். பி. சரவணபவன்

யாழ்ப்பாணம், ஒக. 29

ஈழத் தமிழர்கள் விடயம் இந்தியாவைத் தாண்டி நகராது என்பதை உணர்ந்தமையாலேயே தமிழ் கட்சிகள் இந்த விடயத்திலாவது ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனாலும், தமிழர்களின் வெளிவிவகாரத்தைக் கையாளும் ஒரு சில நபர்கள், இந்த யதார்த்தத்தைப் புரியாது செயல்படுவது என்பது எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடுவதைப்போன்றது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் நடைபெற்ற அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “இலங்கைத் தமிழர்களுக்கு கிடைத்த ஆளுமைகளில் தனித்துவமானவர் அமிர்தலிங்கம். இந்தத் தீவில் தமிழர்களின் தனி நாட்டுக்கான போராட்டத்துக்கு விதை போட்டவர்களில் அவரும் ஒருவர். இந்த விடயம் தொடர்பில் பல விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால், தனி நாட்டுக்கான தமிழ் மக்களின் ஆணை, அமிர்தலிங்கத்தால்தான் கிடைக்கப்பெற்றது என்பதை மறுதலிக்க முடியாது.

இன்று பலர் பூகோள அரசியல், இராஜதந்திரம் என்று கூறிக்கொண்டு எமது மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது வல்லாதிக்க வல்லூறுகளுக்கு இலங்கை என்ற தீவு இரையாகிக் கொண்டிருக்கின்றது. சீனாவின் உளவுக் கப்பலின் வருகையோடு அந்தப் பூகோள அரசியல் கொதிநிலைக்கு சென்றுள்ளது. இந்தக் கொதிநிலையும் இவ்வாறான நெருக்குதல்களும் இத்தோடு முடிந்து விடப்போவதுமில்லை.

எம்மைச் சுற்றி நடக்கின்ற இந்த விடயங்களை எப்படி நாம் கையாளப்போகின்றோம்? தனித்துவமான இனமாக இந்தத் தீவில் வாழ்வதற்கு துடிக்கும் நாங்கள் அதற்காக என்ன செய்யப் போகின்றோம் என்ற திடமான வழிவரைபடம்கூட இல்லாமல், எல்லாவற்றுக்கும் இழுத்த இழுப்பாக சென்று கொண்டிருக்கின்றோம்.

ஈழத் தமிழர்களின் வெளிவிவகார கொள்கை என்பது தனிமனிதர்கள் சிலரின் கொள்கையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அன்று அமிர்தலிங்கம் போன்றோர் தூர நோக்கோடும் தீர்க்க தரிசனத்தோடும் விடயங்களைக் கையாண்டனர். ஆனால், இன்று, தத்தமது தனிப்பட்ட நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் வெளிவிவகாரத்தை கையாண்டு, ஈழத் தமிழர்களைத் தொடர்ந்தும் தத்தளிக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஈழத் தமிழினம் கரைசேராமல் இருப்பதற்கு இதுவும் பிரதான காரணம். ஈழத் தமிழர்கள் விடயம் இந்தியாவைத் தாண்டி நகராது என்பதை உணர்ந்தமையாலேயே தமிழ் கட்சிகள் இந்த விடயத்திலாவது ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனாலும், தமிழர்களின் வெளிவிவகாரத்தைக் கையாளும் ஒரு சில நபர்கள், இந்த யதார்த்தத்தைப் புரியாது செயல்படுவது என்பது எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடுவதைப்போன்றது” - என்றார். (ஐ)

# திருட்டு சந்தேகநபர் குப்பிழானில் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 29

குப்பிழான் பிரதேசத்தில் பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அண்மைய நாட்களில் குப்பிளான் மற்றும் புன்னாலை கட்டுவன் பகுதிகளில் நீர் இறைக்கும் மின் மோட்டார் இயந்திரங்கள், சைக்கிள்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் திருட்டு போயின என்று முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன.

இந்த நிலையில், யாழ். மாவட்ட புலனாய்வுத் தகவலுக்கு அமைய குப்பிழான் வடக்கு கம்பம்புலத்தை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 7 சைக்கிள்கள், 4 மோட்டர்கள், 2 எரிவாயு சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், கைதான இளைஞரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# முள்ளிவாய்க்காலில் நேற்று மக்கள் குரல் போராட்டம்!




முல்லைத்தீவு, ஓக. 29

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவால் 100 நாட்கள் செயல்முனைவு மக்கள் குரல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

"வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 28ஆம் நாளான நேற்று ஞாயிற்றுக் கிழமை முள்ளிவாய்க்காலில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள், பெண்கள், சிவில் அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், விவசாய மற்றும் மீனவர் அமைப்புக்கள் என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்தனர். (ஐ)

# புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சை ஆரம்பித்தார் நீதி அமைச்சர்!

## - நீதியரசர் தலைமையில் குழுவும் நியமனம் -

கொழும்பு, ஓக. 29

**புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகள் எழுப்பிய கரிசனைகளுக்கு தீர்வு காண்பதற்காக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச முன்னாள் பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தலைமையில் மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளார்.**

புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் தொலைசந்திப்பு முறைமை மூலம் பேச்சுகளை நடத்தி இவற்றுக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, கனடாவை சேர்ந்த நீதி மற்றும் சமத்துவத்துக்கான கனடா அமைப்பினருடன் நீதியமைச்சர் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார். அவுஸ்திரேலியா, பிரான்ஸ் நாடுகளின் புலம்பெயர் அமைப்புகளுடனும் அமைச்சர் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையில் குறிப்பிட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் விடுதலை செய்யப்பட்ட ரோய் சமாதானம் என்பவர் தலைமையிலான கனடா அமைப்புடனும் பேச்சு நடக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யவேண்டும், வடக்கு, கிழக்கில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதற்கு முடிவு காணவேண்டும் என்ற இரண்டு முக்கிய கோரிக்கைகளை புலம்பெயர் தமிழர் அமைப்புகள் முன்வைத்துள்ளன. சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தவேண்டும் எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

புலம்பெயர் சமூகத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதை உறுதி செய்துள்ள நீதிய மைச்சர் அவர்களின் கரிசனைகளை கவனமாக செவிமடுத்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னரே மூவர் அடங்கிய குழுவை நியமித்துள்ளதாகவும் அந்த குழுவை வெள்ளிக்கிழமை சந்தித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# எதிர்காலத்தில் பேரிடர்கள் மன்னார் தீவில் ஏற்படலாம்!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை

மன்னார், ஓக. 29

மன்னார் தீவானது பெரும் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள நேரிடலாம் என துறைசார்ந்த நிபுணர்கள் எச்சரிப்பதால் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் காற்றாலை அமைத்தலும் கனிய மணல் அகழ்வும் தொடர்வதால் இது தொடர்பாக கலந்துரையாடலுக்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும் என அரச அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி. எஸ். சிவகரன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார். அதில்,

மன்னார் தீவுப்பகுதியில் ஏலவே முப்பது காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 21 காற்றாலைகள் அமைக்கும் பணி தொடங்கி யுள்ளன.

பெருநிலப்பரப்பில் மாதிரி கிராமம் தொடக்கம் முள்ளிக் குளம் வரை முப்பத்தெட்டு காற்றாலைகள் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது. இதற்கு அப்பால் அதானியின் நிறுவனமும் காற்றாலை அமைக்கும் பணியை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பரீட்சாத்தர்மாகக் தொடங்கப்பட்ட கனிய மண் அகழ்வு பல ஆயிரக்கணக்காக துளைகளிட்டு மாதிரிகள் பெறப்பட்டுள்ளன என அறிகிறோம். மன்னார் தீவு பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து மிகவும் உயரம் குறைந்த நில அமைப்பை கொண்டதாகும்.

இவ்விதமான செயல்பாட்டால் மன்னார் தீவுப்பகுதியானது பெரும் இயற்கை அனர்த்தத்தை எதிர் கொள்ள நேரிடலாம். என துறைசார்ந்த நிபுணர்கள் எச்சரிப்பதால் மக்கள் மத்தியிலே அச்ச நிலை தோன்றியுள்ளது.

எனவே, இவ் விடயம் தொடர்பாக துறை சார்ந்த திணைக்களங்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கி விரைவாக கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# 'பன்னாட்டு குற்றங்கள்' நூல் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 29

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப செயலாளர் இ. நா. ஸ்ரீஞானேஸ்வரன் எழுதிய "பன்னாட்டுக் குற்றங்கள்" நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னிலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செ.விந்தன் புத்தகத்தை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை நாகமணி இராமநாதன் பெற்றுக்கொண்டார்.

புத்தகத்துக்கான மதிப்பாய்வை யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல்த் துறைத் தலைவரும் பேராசிரியருமான கே.ரி.கணேசலிங்கம் நடத்தினார். (ஐ)

# கணவன் - மனைவி தகராறில் கன்றுக்குட்டி அடித்து கொலை!

யாழ்ப்பாணம், ஓக. 29

கணவன், மனைவியின் குடும்பத் தகராறால் மனைவியின் சகோதரனின் மூன்று மாத மாட்டுக் கன்று அடித்துக் கொல்லப்பட்டது.

யாழ்ப்பாணம், வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன், மனைவி இடையே ஏற்பட்ட சண்டையில் மனைவியின் சகோதரன் தலையிட்டுள்ளார். இதன்போது அவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த கணவர் தனது மனைவியின் சகோதரனின் வீட்டுக்குள் நுழைந்து மூன்று மாதமேயான கன்றுக் குட்டியை கல்லால் அடித்துக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஊடகவியலாளர் பிரகாஷ் நினைவாக குருதிக் கொடை!

தென்மராட்சி, ஓக. 29

கடந்த வருடம் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரத்த தான முகாம் நடைபெற்றது.

காலமான பிரகாஷின் நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு நோயால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

சவாலுக்கு மத்தியில் ஊடகத் துறையில் தன்னை நிலை நிறுத்திய அவர் பத்திகைகளுக்கும், இணையங்களுக்கும் செய்திகளை வழங்குபவராக, இணைய பதிவேற்றுநராக பணியாற்றினார்.

இந்நிலையில் கடந்த 2021 செப்ரெம்பர் 2ஆம் திகதி கொரோனாத் தொற்றால் அவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹோட்டல் அறையில் தீ பரவல் கனடா தமிழர் உடைமை நாசம்!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள பிரபல தனியார் ஹோட்டல் ஒன்றின் அறையில் ஏற்பட்ட தீ விபத்தால் கனடா நாட்டில் இருந்துவந்து அங்கு தங்கியிருந்தவர்களின் அனைத்து உடைமைகளும் அழிவடைந்தன.

ஹோட்டல் அறையின் குளிரூட்டியில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. (ஐ-3)



# ஆறு இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது!

மன்னார், ஓக. 29

இலங்கை கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 6 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு தலைமன்னாரில் கைது செய்யப்பட்டனர்.

கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்கள் பயன்படுத்திய இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான இந்திய மீனவர்கள் 6 பேரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



அவர்களை, தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட நீரியல் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கவுள்ளனர். (ஐ)

# தேடப்பட்ட போதைப்பொருள் விற்பனையாளர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்கிறார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று கோண்டாவில் ரயில் நிலையத்தில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த 27 வயது நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் பெறப்பட்ட 75 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ஐ)

# பல அரச நிறுவனங்கள் மூடப்படும் நிலையில்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஓக. 29

**“அரச நிறுவனங்களில் பல நஷ்டம் ஏற்படும் நிலையில் உள்ளன. சில அரச நிறுவனங்கள் மூடப்படும் நிலைமைக்கு வந்துள்ளன. இந்த நிறுவனங்கள் மூடப்பட்டால் பெரும் தொகையினருக்கு தொழில் இல்லாமல் போகும்” என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தொழில்சங்க பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

“நாங்கள் எப்பொழுதும் நிறுவனத்தைப் பாதுகாத்துக் கொண்டு தமது உரிமைகளை வெல்வதற்கு முயற்சிக்க வேண்டும். இதே போன்று திறைசேரியில் தங்கியிருக்காமல் வருமானம் ஈட்டுகின்ற முறை ஒன்றையும் நாங்கள் யோசிக்க வேண்டும். தற்போது நாடு பெரும் பொருளாதாரப் பிரச்னைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. டொலர் தட்டுப்பாடு இருப்பதால் தொடர்ந்தும் திறைசேரியில் தங்கி இருக்க எங்களால் முடியாது.



கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் பெரும் கடன் பெறப்பட்டது. அந்தக் கடனை நாங்கள்தான் செலுத்த வேண்டி வந்தது. அதுபோல கொரோனா சிக்கல் எங்களுடைய பொருளாதாரத்துக்கு பெரும் அழுத்தத்தை தந்தது. இந்தப் பொருளாதாரப் பிரச்னை இவ்வளவு கடுமையாவதற்கு அதுவும் ஒரு காரணம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தப் பிரச்னையை தூரத்தில் இருக்கும்போதே கண்டார். அதனால் தான் இறக்குமதியைக் கட்டுப்படுத்தினார். எனினும், மற்றவர்கள் செய்த தவறுகளைச் சுமக்க வேண்டி வந்ததால் அவர் பதவியைக் கைவிட்டு வெளியேற வேண்டி வந்தது.

கோட்டா கோ ஹோம் சொன்ன அவர்கள் இப்பொழுது ரணில் கோ ஹோம் என்று சொல்கின்றார்கள். வருகின்ற வருகின்ற எல்லா ஜனாதிபதிகளையும் துரத்த முயற்சித்தால் யார் நாட்டை ஆட்சி செய்வது.

எப்படியாவது பொறுத்துக் கொண்டு இந்தப் பயணத்தில் சென்றால் இன்னும் ஒன்றரை வருடத்தில் மின்சக்திப் பிரச்னை, எரிவாயு மற்றும் எரிபொருள் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். தமது தொழிற்சங்க உரிமைகளை மட்டும் பேசிக் கொண்டிருப்பதற்கு முன்னர் நாடு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எங்களால் நிலைத்து நிற்க முடியாது” - என்றார்.

# கப்பம் கோரி கடத்தப்பட்ட செல்வந்தரின் மகன் விடுவிப்பு!

## நான்கு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஓக. 29

கப்பம் கோரி கடத்தப்பட்டிருந்த கந்தானை - ஹப்புகொட பகுதியைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரின் மகன் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கப்பம் பெறும் நோக்கில் கந்தானை - ஹப்புகொட பகுதியைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரின் மகன் அடையாளம் தெரியாத குழுவொன்றினால் நேற்று முன்தினம் கடத்தப்பட்டிருந்தார்.

22 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டார். இவரை விடுவிப்பதற்காக அவரின் தந்தையிடம் 56 இலட்சம் ரூபாய் கோரப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடத்தப்பட்ட இளைஞர் பயணித்த கார் வத்தளை - கெரவலப்பிட்டியில் மீட்கப்பட்டது.

தந்தையுடனான கொடுக்கல் - வாங்கல் தொடர்பிலேயே இளைஞர் கடத்தப்பட்டார் என்றும், 56 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிய வருகின்றது.

எனினும், வங்கியின் தகவல்களுக்கு அமைய இந்தச் சம்பவம் தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# வெளிநாட்டு நாணயத்தை முறையற்று கையாள்வோரை பிடிக்கத் தனிக் குழு!

கொழும்பு, ஓக. 29

முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயங்களை கையாளும் நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ் மா அதிபரால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு சட்டரீதியான வங்கி செயல்பாடுகளுக்கு புறம்பாக முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணய பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் ஊடாக வெவ்வேறு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணய பரிமாற்றம் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இதன் காரணமாக முறையற்ற விதத்தில் வெளிநாட்டு நாணயங்களை பெறவோ, செலுத்தவோ வேண்டாம் என பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர். அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை விரிவுபடுத்த உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பேருந்துக்காக காத்திருந்தவர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக. 29

பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்த இளைஞன் மீது வன்முறை கும்பல் ஒன்று வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று உடுவில் பிரதேச செயலகத்துககு அருகில் உள்ள பேருந்து நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில், இணுவில் காரைக்கால் பகுதியை சேர்ந்த இளைஞன் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# யாழ். வாசியின் கடவுசீட்டில் இலங்கை வந்த நபர் கைது!

கொழும்பு, ஓக. 29

இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டுக்குள் நுழைய முயன்ற பங்களாதேஷ் பிரஜை ஒருவர் நேற்றுமுன்தினம் காலை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நாடு கடத்தப்பட்டார்.

45 வயதான சந்தேக நபர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். ஆனால், அதே விமானத்தில் அவர் நாடு கடத்தப்பட்டார்.

சந்தேக நபர் குவைத்தில் இருந்து கொழும்பு வந்த விமானத்தில் நாட்டுக்கு வந்தார். அவர், இலங்கை கடவுச்சீட்டை சமர்ப்பித்த நிலையில் அது போலியானது என அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

குவைத்தில் உள்ள பங்களாதேஷ் தூதரகம் வழங்கிய அடையாளச் சான்றிதழை அவரின் பொதிகளில் அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

குவைத்தில் உள்ள தரகர் ஒருவர் ஊடாக இலங்கை கடவுச்சீட்டை பங்களாதேஷ் பிரஜை பெற்றுள்ளாரென விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்த கடவுச்சீட்டு யாழ்ப்பாணத்தில் வசிப்பவருக்கு சொந்தமானது என குடிவரவு அதிகாரிகள் கண்டறிந்தனர். எனினும், சந்தேக நபர் அவர் வந்த அதே விமானத்தில் குவைத்துக்கு நாடு கடத்தப்பட்டார். (ஐ)

# கட்டணம் செலுத்தாத எம். பிக்கள்; சபாநாயகருக்கு தகவல் அறிவிப்பு!

கொழும்பு, ஓக. 29

பெருமளவான அரசியல் பிரமுகர்கள் தண்ணீர் கட்டணத்தை நீண்டகாலமாக செலுத்தவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந் நிலையில், கட்டணம் செலுத்தாத 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்து சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு ஊடாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்த 60 பாராளுமன்ற உறுப்பினர்களும் தண்ணீர் கட்டணமாக ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாயை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரை சந்தித்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறியப்படுத்தியது.

இதற்கமைய பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் இந்த விடயத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அறிவித்துள்ளார். (ஐ)

# 2022 உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஓக. 29

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இதேவேளை, இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு மீள தோற்ற வேண்டுமெனில் எதிர்வரும் செப்ரெம்பர் 1ஆம் திகதி 8ஆம் திகதி வரையில் ஒன்லைன் முறைமையில் விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், பரீட்சை பெறுபேறுகளுக்கான மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்கும் முறைமை மற்றும் காலம் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காங்கிரசிலிருந்து மேலும் பலர் கிளம்பத் தயாராகின்றனர்!



இந்தியாவின் மூத்த அரசியல் கட்சியான காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய மூத்த தலைவர் குலாம் நபி ஆசாதுக்கு, காங்கிரஸ் கட்சியில்ஆதரவு பெருகி வருகிறது. மூத்த தலைவர்கள் பலர், தங்கள் ஆதரவை வெளிப்படையாக தெரிவித்து வருகின்றனர். புதுக் கட்சி அறிவிப்பை குலாம் நபி ஆசாத் வெளியிட்டதும், காங்கிரசில் இருந்து மூட்டை கட்ட, பல மாநில உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.

காங்கிரசில் உட்கட்சி மோதல் தீவிரமாக உள்ளது. கட்சிக்கு நிரந்தர தலைவரை தேர்ந்தெடுப்பது, அனைத்து நிலைகளிலும் சீர்திருத்தம் மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுக்க, 23 மூத்த தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். "ஜி - 23" என்றழைக்கப்படும் இந்தத் தலைவர்கள், இது தொடர்பாக கட்சியின் இடைக்கால தலைவர் சோனியாவுக்கு கடிதம் எழுதி இருந்தனர். ஆனால், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல், இந்தத் தலைவர்களை ஓரங்கட்டும் முயற்சியில் கட்சித் தலைமை ஈடுபட்டது.

தேர்தல் ஆணைய விதிகளின்படி, கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், சோனியாவின் மகனும், முன்னாள் தலைவருமான ராகுலே, மீண்டும் தலைமை பொறுப்பை ஏற்க, சில மூத்த தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அதை, ராகுல் மறுத்து, தன் முடிவில் பிடிவாதமாக இருப்பதாக கூறப்படுகிறது. கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை, செப்ரெம்பர் 20க்குள் நடத்த முதலில் முடிவு செய்யப்பட்டது.

ராகுலின் பிடிவாதத்தில், இதற்கான திகதி மேலும் ஒரு மாதத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் திகதியை முடிவு செய்வதற்காக காங்கிரஸ் செயற்குழு கூட்டம், சோனியா தலைமையில் "வீடியோ கான்பரன்ஸ்" வாயிலாக நேற்று நடந்தது.

இந்நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகுவதாக, நேற்று முன்தினம் அறிவித்தார். இது தொடர்பாக அவர், சோனியாவுக்கு ஐந்து பக்க கடிதத்தை அனுப்பியுள்ளார். இதில், கட்சியின் தற்போதைய மோசமான நிலைக்கு, ராகுலே காரணம் என குற்றஞ்சாட்டியுள்ளார். கட்சியில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ள குலாம் நபி ஆசாத்துக்கு, தென் மாநிலங்களில் பெரிய ஆதரவு இல்லை. அதே நேரத்தில், வட மாநிலங்களில் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, பஞ்சாப் எம்.பி.,யான மணீஷ் திவாரி உள்ளிட்டோர், வெளிப்படையாக தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

இவர்கள், குலாம் நபி ஆசாதின் அடுத்தகட்ட நடவடிக்கைக்காக காத்திருக்கின்றனர். புதிய கட்சி துவங்குவது குறித்த அறிவிப்பை அவர் வெளியிட்டதும், காங்கிரசில் இருந்து வெளியேறக் காத்திருக்கின்றனர். ஆசாத்தின் திடீர் முடிவுக்கு, வட மாநிலங்களில் இருந்து பல மொழிகளில் வெளியாகும் பத்திரிகைகளும் ஆதரவு தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளன. அவருடைய விலகல், காங்கிரஸ் கட்சிக்கு பலத்த அடியாக இருக்கும் என்று அவை குறிப்பிட்டுள்ளன.

குறிப்பாக ஜம்மு - காஷ்மீரில் அடுத்தாண்டில் சட்டசபை தேர்தல் நடக்கலாம் என தெரிகிறது. இதன் முன்னாள் முதல்வரான குலாம் நபி ஆசாதின் தற்போதைய முடிவு, அங்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என கூறப்படுகிறது. அவர் தன் புதிய கட்சியை அங்கு துவக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அப்படி துவக்கினால், அங்குள்ள காங்கிரஸ் கூடாரம் காலியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் இந்தாண்டு இறுதியில் சட்டசபை தேர்தல் நடக்க உள்ள குஜராத், ஹிமாச்சல பிரதேசத்திலும், காங்கிரஸ் கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் அபாயம் உள்ளது. தமிழகம், கர்நாடகம், கேரள மாநில காங்கிரஸ் நிர்வாகிகள், ராகுலின் பாதுகாவலர்கள் போல் செயல்படுவதாகவும், ராகுலை சந்திக்க இவர்கள் அனுமதி மறுப்பதாகவும், மூத்த தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். கட்சியில் பிரச்னைகள் தீவிரமாக இருக்கும் நிலையில், ராகுல் வழக்கம்போல் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளது, பல கேள்விகளையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரசில் இருந்து விலகியுள்ள மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், விரைவில் புதிய கட்சியை துவக்க உள்ளார். ஆசாதின் சொந்த மாநிலமான ஜம்மு - காஷ்மீரில் இருந்து புதுக் கட்சி துவக்கப்படும் என, அவருக்கு நெருக்கமான முன்னாள் ஜம்மு - காஷ்மீர் அமைச்சர் ஜி.எம்.சரூரி கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறிய தாவது:

கட்சியில் இருந்து குலாம் நபி ஆசாத் விலகியதும், அவருக்கு ஆதரவாக, நான் உட்பட பலரும் கட்சியில் இருந்து விலகியுள்ளோம். ஜம்மு - காஷ்மீரில் பல்வேறு நிலைகளில் உள்ள கட்சியினரும் விலகத் தயாராகி வருகின்றனர். குறிப்பாக, 100 க்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்பு தலைவர்கள் விலகி உள்ளனர்.

ஜம்மு - காஷ்மீரில் காங்கிரஸ் கிட்டத்தட்ட துடைக்கப்பட்டு விடும். அனைவரும், குலாம் நபி ஆசாதுக்கு ஆதரவாக உள்ளோம். அவர் தேசிய அளவில் புதிய கட்சியை துவக்க உள்ளார். ஜம்மு - காஷ்மீரில், அடுத்த 15 நாட்களுக்குள் இதன் முதல் கிளை துவக்கப்படும்.

ஜம்மு - காஷ்மீருக்கு மீண்டும் சிறப்பு அந்தஸ்து பெற்றுத் தருவது என்ற கொள்கையில், குலாம் நபி ஆசாத் உறுதியாக உள்ளார். பா.ஜ.,வின் தூண்டுதலால் அவர் செயல்படுவதாக கூறப்படுவதை ஏற்க முடியாது. மதச்சார்பற்ற தலைவரான அவர், பா.ஜ.,வுடன் இணைந்து செயல்பட மாட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

**அதிருப்தியாளர்களுக்கு பதவி?**

கர்நாடகாவில் அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளதால், காங்கிரஸ் அதிருப்தி தலைவர்களை தங்கள் பக்கம் இழுக்க, பா.ஜ., - மதசார்பற்ற ஜனதா தளம் ஆகிய கட்சிகள் ஈடுபட்டுள்ளன. ஏற்கனவே முன்னாள் மத்தியஅமைச்சர் இப்ராஹிம், காங்கிரசில் இருந்து விலகி ம.ஜ.த.,வில் இணைந்தார். தற்போது, கோலாரைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் முனியப்பா, பா.ஜ.,வில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கட்சியில் அதிருப்தியில் உள்ள தலைவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு பதவிகள் வழங்கி, சமாதானம் செய்ய காங்., மூத்த தலைவர்கள் வியூகம் வகுத்துள்ளனர். காங்கிரஸ் எம்.பி., ராகுல், அடுத்த மாதம் கர்நாடகாவில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளதால், அதற்கு முன்னரே அதிருப்தி சரி கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**"ஜி 23" தலைவர்கள் ஆலோசனை**

காங்கிரசிலிருந்து குலாம் நபி ஆசாத் விலகியதை அடுத்து, "ஜி 23" என அழைக்கப்படும் காங்கிரஸ் அதிருப்தி தலைவர்களில் சிலர், நேற்றுமுன்தினம் டில்லிக்கு வந்திருந்தனர். டில்லியில் உள்ள குலாம் நபி ஆசாத் வீட்டில் அவர்கள், அவசர ஆலோசனையில் ஈடுபட்டனர்.

தங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி அவர்கள் ஆலோசித்ததாக தெரிகிறது. இது பற்றி அதிருப்தி தலைவர்களில் ஒருவரான மணீஷ் திவாரி கூறுகையில், "கட்சி தலைமைக்கு எதிராக நாங்கள் கடிதம் எழுதி இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. இதை அவர்கள் இன்னும் பரிசீலிக்கவே இல்லை. கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை குறித்து சுய பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம்," என்றார்.

> தேர்தல் ஆணைய விதிகளின்படி, கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், சோனியாவின் மகனும், முன்னாள் தலைவருமான ராகுலே, மீண்டும் தலைமை பொறுப்பை ஏற்க, சில மூத்த தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அதை, ராகுல் மறுத்து, தன் முடிவில் பிடிவாதமாக இருப்பதாக கூறப்படுகிறது. கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற் கான தேர்தலை, செப்ரெம்பர் 20க்குள் நடத்த முதலில் முடிவு செய்யப்பட்டது.



# ரணிலின் இரண்டு இலக்குகள்:

## முதலாவது, சஜித்தை தோற்கடிக்க வேண்டும்! பொதுஜனபெரமுனவை சமாளிக்கவேண்டும்!!

-புலோலியூரான் சதாவதானி



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்க முடியாதவராகக் காணப்படுகிறார். ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்க முடியாத சிங்கள தலைவர்கள் அது காரணமாகவே சர்வ கட்சி அரசாங்கம் என்ற அடுத்த நிலைக்கு வருகிறார்கள். ஆனால் இப்போதுள்ள நிலைமைகளின் படி அப்படி ஒரு சர்வகட்சி அரசாங்கத்தைக்கூட உருவாக்க ரணில் விக்ரமசிங்கவால் அமைக்க முடியாது என்று தோன்றுகிறது.

ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்க அவர் தயாரில்லை. ஏனென்றால் அவர் தாமரை மொட்டில் (பொது ஜனபெரமுன) தங்கி இருப்பவர். நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு உரிய காலம் வரும் வரையும் அவர் தாமரை மொட்டுடன் சுதாகரிக்க வேண்டும். அதற்கு பின்னர் தான் அவர் தாமரை மொட்டோடு ஒருவித பேரத்துக்கு போகமுடியும். எனவே அதுவரையிலும் அவர் தாமரை மொட்டை அனுசரித்தே போவார்.

தேசிய அரசாங்கத்தை உருவாக்க சஜித் பிரேமதாச தயாராக இல்லை. ஏனெனில் ரணில் விக்ரமசிங்கவின் இரண்டாவது இலக்கு, யார் என்பது சஜித்துக்கு தெரியும். முதலாவது இலக்கு அரகலய. இரண்டாவது இலக்கு சஜித். ரணில் அரகலயவை பெருமளவுக்கு முறியடித்து விட்டார். அடுத்த இலக்கு சஜித். சஜித்தை தோற்கடித்தால்தான் மறுபடியும் யூ. என்.பியை பலமான ஒரு கட்சியாகக் கட்டியெழுப்பலாம். ஒன்றில் சஜித் ரணிலிடம் சரணடைய வேண்டும். அல்லது ரணில் சஜித்தை தோற்கடிக்க வேண்டும். எனவே ஓர் அனைத்துக் கட்சி அரசாங்கத்தில் ரணிலை நம்பி இணைந்தால் அவர் தன்னை தோற்கடித்து விடுவார் என்று சஜித் பயப்படுகிறார்.அப்படி பயப்படத் தேவையான ஒரு அனுபவம் ஏற்கனவே உண்டு. 2015 ஆட்சி மாற்றத்தின்போது ரணிலும் மைத்திரியும் இணைந்து ராஜபக்சக்களை தோற்கடித்தார்கள். ஆனால் ரணில் மைத்திரிக்கு உரிய முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை. மாறாக அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மைத்திரியை எப்படி ஓரங்கட்டலாம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எப்படி மேலும் பலவீனப்படுத்தலாம் என்றுதான் ரணில் சிந்தித்தார். அதுதான் மைத்திரி ஒரு கட்டத்தில் தன் பழைய எஜமானர்களிடமே திரும்பிச் செல்லக் காரணம். எனவே ரணிலை நம்பி ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்க எதிர்க்கட்சிகள் தயாரா என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

இவ்வாறான ஒரு பின்னணிக்குள்தான் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னிருந்து இன்று வரையிலும் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்க முடியாதவராகக் காணப்படுகிறார்.

ஓர் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதை விடவும் ஏனைய கட்சிகளை உடைத்து எப்படித் தன்னுடைய ஸ்தானத்தை பலப்படுத்தலாம் என்றுதான் அவர் சிந்திப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக சஜித் அணிக்குள் இருப்பவர்களை எப்படி உருவி எடுக்கலாம் என்றுதான் அவர் சிந்திப்பார். நிறைவேற்று அதிகாரம் உடைய ஒரு ஜனாதிபதியாக அதைச் செய்யத் தேவையான வளங்களை அவர் கொண்டிருக்கிறார்.

எனவே வெளித்தோற்றத்துக்கு ஓர் அனைத்துக் கட்சி அரசாங்கத்திற்கு தயார் என்று காட்டிக் கொண்டு திரைமறைவில் சஜித்தை எப்படித் தனிமைப்படுத்தலாம் என்று அவர் சிந்திப்பார்.

அவருடைய இரண்டாவது இலக்கு: தாமரை மொட்டுடனான தங்கு நிலையில் இருந்து விடுபடுவது. நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு கிடைக்கும் பொழுது முதற்கட்டமாக அது நிறைவேறும். ஏனென்றால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், பிறகு நடக்கும் ஒரு தேர்தலில் தாமரை மொட்டு இப்போது வைத்திருக்கும் பெரும்பான்மை பெறுவது கடினம் என்று அக்கட்சி அஞ்சுகிறது. அது ரணிலுக்குத் தெரியும். தாமரை மொட்டு வெல்லும் வாய்ப்புகள் குறைவு என்பதால் உடனடிக்கு ஒரு பொதுத் தேர்தலை சந்திக்க தாமரை மொட்டு தயார் இல்லை. எனவே நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு அந்தக் கட்சி இப்பொழுது தயாராக இல்லை. குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க யாப்பின் பிரகாரம்அடுத்த மார்ச்சில் பாராளுமன்றத்தை கலைக்கும் அந்த அதிகாரத்தை பெறும்பொழுது தாமரை மொட்டு இயல்பாகவே ரணிலின் தயவில் தங்கியிருக்கும் ஒரு நிலைமை வரும்.




அப்பொழுது ரணிலின் பேரம் மேலும் அதிகரிக்கும்.

பொருளாதார நெருக்கடியை அவர் தற்காலிகமாகவேனும் தணித்து வருகிறார் என்ற ஒரு தோற்றம் வெற்றிகரமாக கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. எரிபொருளுக்கும் எரிவாயுவுககுமாக நின்ற நீண்ட வரிசைகளை இப்பொழுது காண முடிவதில்லை. இந்த மாதம் அரிசித் தட்டுப்பாடு வரலாம் என்று ரணில் ஏற்கனவே எச்சரித்திருந்தார். ஆனால் தட்டுப்பாடு வரவில்லை. அரிசி விலை இறங்கவில்லைத்தான் ஆனால் ஏறவும் இல்லை. சீனாவிடம் இருந்தும் இந்தியாவிடம் இருந்தும் கிடைக்கும் அரிசியின் மூலம் ரணில் நெருக்கடியில் இருந்து தப்ப முயற்சிக்கக்கூடும்.



அனைத்துலக நாணய நிதியத்துடனான உரையாடல்கள் எதிர்பார்த்த வேகத்தில் எதிர்பார்த்த வெற்றிகளை பெற்றுத்தரவில்லை. அந்த உரையாடல்கள் பூகோள அரசியல் போட்டிக்குள் சிக்கியிருப்பதாகவே தெரிகிறது.

சீனா இலங்கைக்கு வழங்கிய கடனை மீளக் கட்டமைக்க வேண்டும் என்று அனைத்துலக நாணைய நிதியம் கேட்கிறது. ஆனால் அந்த பேச்சுவார்த்தைகளில் சீனா இலங்கைக்கு சாதகமான முடிவுகளை இதுவரையிலும் எடுக்கவில்லை.

அனைத்துலக நாணய நிதியத்துடனான உரையாடல்கள் இப்பொழுதும் அதிகாரிகள் மட்டத்திலானவைகளாகவே காணப்படுகின்றன. அதாவது அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து உடனடிக்கு உதவிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியம் ஒரு சர்வரோக நிவாரணி அல்ல. இலங்கைத் தீவு ஏற்கனவே 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் உடன்படிக்கைகளைச் செய்திருக்கிறது. இதில் ஏழு தடவைகள் அந்த உடன்படிக்கைகளை பூர்த்தி செய்யவில்லை.


நாட்டில் முதலாவதாக அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு தலைமை கட்டி எழுப்பப்பட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க இந்த இரண்டையும் பூர்த்தி செய்ய முடியாதவராகக் காணப்படுகிறார். ஓர் அனைத்துக் கட்சி அரசாங்கத்தின்மூலம் அவர் ஒப்பிட்டுளவில் அதைச் செய்யலாம். நிச்சயமாக எதிர்க்கட்சிகளைப் பிரித்து ஆள்வதன் மூலம் அல்ல. மொத்தத்தில் ரணில் நரித்தந்திரம் அதிக நாட்கள் நிலைக்காது.

தேசிய அரசாங்கத்தை உருவாக்க சஜித் பிரேமதாச தயாராக இல்லை. ஏனெனில் ரணில் விக்ரமசிங்கவின் இரண்டாவது இலக்கு, யார் என்பது சஜித்துக்கு தெரியும். முதலாவது இலக்கு அரகலய. இரண்டாவது இலக்கு சஜித். ரணில் அரகலயவை பெருமளவுக்கு முறியடித்து விட்டார். அடுத்த இலக்கு சஜித். சஜித்தை தோற்கடித்தால்தான் மறுபடியும் யூ.என். பியை பலமான ஒரு கட்சியாகக் கட்டியெழுப்பலாம். ஒன்றில் சஜித் ரணிலிடம் சரணடைய வேண்டும். அல்லது ரணில் சஜித்தை தோற்கடிக்க வேண்டும்.


# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)




38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?






1) 2) 3)

39. 3 * 4 ⊞ 3 = 15 இங்கு * ⊞ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1 — 29.08.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2 — 29.08.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனை பள்ளிவாசலில் நேற்று இரத்த தான முகாம்!



கல்முனை, ஒக. 29

கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் வழிகாட்டலில் தஃவா குழுவின் ஏற்பாட்டில் பள்ளிவாசலில் நேற்று இரத்த தான முகாம் இடம்பெற்றது.

ஹூதா ஜும்ஆ பள்ளி வாசல் தலைவர் ஏ.வி.எம். இப்ராஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான முகாமில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு இந்த இரத்ததான முகாம் நடைபெற்றது.

இதில், பெருமளவான இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் இரத்ததானம் செய்தனர். (ஐ-1)

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற ஒன்று இல்லவே இல்லையாம்!

## உலமா கட்சி சொல்கிறது

**கல்முனை, ஒக. 29**

**கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்ற ஒன்றே இல்லாத நிலையில் அதன் பெயர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டமை நியாயமானதே என உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்தார்.**

கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கக் கூடிய வகையில் உபபிரதேச செயலகம் 1989ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஒரு தனியான பிரதேச செயலகம் அல்ல, மாறாக உப செயலகமாகும்.

ஆனால், யுத்த காலத்தில் இதற்கான பெயர் கல்முனை தமிழ் செயலகம் என்றும், கல்முனை தமிழ் வடக்கு செயலகம் என்றும் சிலரால் அழைக்கப்பட்டது. இவ்வாறு அழைப்பதற்கான எந்த வோர் அரச வர்த்தமானி அறிவித்தலும் இல்லை.

மேலும் 1993.09.03 ஆம் திகதி கல்முனை உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்த அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பித்ததாகவும் அதையும் அரசியல்வாதிகள் தடுத்தனரெனவும் தமிழர் தரப்பில் உ ண்மைக்குப் புறம்பாக கூறப்படுகின்றது.

1993.09.03இல் 28 உப பிரதேச செயலகங்களை தரமுயர்த்துவதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், 27ஆவது இடத்தில் கல்முனை (தமிழ் பிரிவு) உப செயலகம் என அரசியலமைப்புக்கு மாற்றமாக இன ரீதியான பெயரும், நிர்ணயம் செய்யப்பட்ட எல்லையும் இல்லாததால் இது அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டது. ஏனைய 27 உப பிரதேச செயலகங்களும், பிரதேச செயலகங்களாக அங்கீகரிக்கப்பட்டன. இதை விளங்காமல் முஸ்லிம்கள் மீது பழி போடுவது அறிவீனமாகும்.

அன்றைய அரசாங்கங்களுக்கு யுத்தமே பெரிய விசயமாக இருந்ததால் இதனை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. யுத்தம் முடிந்ததும் சிங்கள அரசுடன் சண்டை பிடித்து தோற்ற சில இனவாத தமிழர்களுக்கும், தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் தமிழ் கட்சிகளுக்கும் யாராவது புதிய எதிரி தேவைப்பட்டது. அத்தகைய எதிரிகளாக கல்முனை முஸ்லிம்கள் சித்திரிக்கப்பட்டு கடந்த நல்லாட்சிக்காலத்தில் இந்த விடயம் பெரிதாக்கப்பட்டு ஒற்றுமையாக வாழும் கல்முனைத் தொகுதி முஸ்லிம் - தமிழ் மக்களிடையே இன முறுகல் ஏற்படுத்தப்பட்டது.

கல்முனையை இனரீதியாக பிரிக்க கூடாது. கல்முனையில் 99 வீதம் தமிழர்கள் வாழும் பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பை இணைத்து ”பாண்டிருப்பு செயலகம்” வழங்க வேண்டும் என்பதே எமது கட்சி முன் வைக்கும் தீர்வாகும். இந்தத் தீர்வை தமிழ் தரப்பு ஏற்று கல்முனையை இன, மத ரீதியில் பிரிக்காமல் தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை வலுப்படுத்த முன் வரவேண்டும்- என்றும் கூறினார். (ஐ-1)

# சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு; கிண்ணியாவில் நடவடிக்கை!

கிண்ணியா, ஒக. 29

கிண்ணியாவில் கரையோர மற்றும் களப்பு நிலங்களை சட்ட விரோதமாக ஆக்கிரமித்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட காக்காமுனை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் திருகோணமலை கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் கிண்ணியா பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

இதன் போது சட்டவிரோதமான முறையில் அனுமதி இன்றி அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட கரையோர மற்றும் களப்பு பகுதிகள் அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் கிண்ணியா பிரதேச செயலக கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கிண்ணியா பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

# சொகுசுக்காரில் போதைப்பொருள் கடத்திய இரு சந்தேக நபர்கள் கைது

கல்முனை, ஒக. 29

நீண்டகாலமாக சொகுசு கார்களில் சூட்சுமமாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களை கடத்தி சென்றவர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப் படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை இந்தக் கைது இடம்பெற்றுள்ளுது.

தகவலையடுத்து வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் சொகுசுக் காரை சோதனை செய்து போதைப் பொருட்களை கைப்பற்றியதுடன் இருவரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைதான நபர்கள் கல்முனையை சேர்ந்த 44 மற்றும் 23 வயதினர் என்பதுடன் சந்தேக நபர்கள் வசமிருந்து 6 கிராம் 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 5 கிராம் 580 மில்லி கிராம் ஹெரோயின், 4 கைபேசிகள் கடத்தலுக்காக பயன்படுத்தப் பட்ட சொகுசு கார் என்ப வற்றை விசேட அதிரடிப் படை கைப்பற்றியது.

கைதானவர்களையும் சான்றுப் பொருட்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-1)

# இடமாற்ற சபையை புறக்கணிக்க நேரும் முகாமைத்துவ சேவையினர் எச்சரிக்கை!

மட்டக்களப்பு, ஒக. 29

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்று சபை தவிசாளராக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் நியமிக்கப்படுமிடத்து இடமாற்ற சபையின் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது

இது தொடர்பாக அனைத்து சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ. ஜி. முபாரக் ஒப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண பிரதமர் செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் ஆகியோர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு பிரதேச சபையிலும் இல்லாதவகையில், வவுணதீவு பிரதேச சபையில் பதவி நிலை உதவியாளர் எனும் பதவி உருவாக்கப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தருடன் அப்பதவிக்கான பொறுப்புகளாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு உரிய கடமைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், இப்பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என்னும் பதவி இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான தொழிற்சங்க முன்னெடுப்புகளுக்கு பொருத்தமான தீர்வை பெற்றுக் கொடுக்க தவறியமையே இதற்கான காரணம் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் PA/CS/6/2/combined இலக்க 2021.01.17 மற்றும் 14/2013 இலக்க 2013.07.14ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட CS/DOS/21/01/02 இலக்க 2017.04.19 சுற்றறிக்கைகளுக்கு மாற்றமான செயல்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறியுள்ளார்

இவ்வாறான அதிகாரியால் தொழிற்சங்க பிரதிநிதிகளின் கருத்துக்களை கவனத்தில் கொண்டதாக, வருடாந்த இடமாற்றுச் சபையின் செயல்பாடுகள் நியாயமான முறையில் அமையாது என கருதுகின்றனர். இதனால், தாம் இந்த சபையின் அமர்வை புறக்கணிப்போம் என்றும் கூறியுள்ளனர். (ஐ)

# கல்முனையை தரமுயர்த்துவதா இல்லையா என்பதை கேளுங்கள்!

கல்முனை, ஒக. 29

தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கு தீர்வைக் காணாமல் தற்போதைய பொருளாதார பிரச்னைக்கு தீர்வுகளை பெற முடியாது. தற்போதைய ஜனாதிபதியிடம் தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். அது தவிர கல்முனை பிரச்னை தொடர்பாக 29 வருடங்களாக இளைஞர்கள் முதல் பெரியவர்களை வரை போராடுகிறீர்கள். இதனை தரமுயர்த்துவதா இல்லையா என்பதை முதலில் வினவுங்கள் இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

## சிவசக்தி ஆனந்தன்

தியாகிகளை நினைவு கூருவோம். அவர்தம் உறவுகளை கௌரவிப்போம் என்ற தொனிப் பொருளில் கல்முனையில் இடம்பெற்ற நிகழ்வில உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர்த் தியாகம் செய்த அத்தனை தமிழ் உறவுகளும் தியாகிகளே. யுத்தத்தால் உயிரிழந்த அனைவருமே தியாகிகள். இவர்கள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காகவே உயிர் நீத்தார்கள் இதில் பலர் தமிழ்க் கட்சிகளில் இருந்தும் உயிரிழந்தனர்.

கடந்த 1983ஆம் ஆண்டு முதல் ஈ. பி. ஆர். எல். எவ். எனப்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உயிரிழந்தனர்.



மனைவி கணவனையும், தாய், தந்தையர் தமது பிள்ளையையும். சகோதரி சகோதரனையும் இழந்துள்ளனர்.

ஒரு குடும்பத்திலிருந்து ஆறு உறவினர்கள் மற்றும் ஐந்து உறவினர்கள் நான்கு உறவினர்கள் என பலரும் தமது உறவுகளை இழந்துள்ளனர். இந்த உயிரிழப்பானது தமிழர்களின் விடிவுக்காக செய்த மிகப்பெரிய தியாகமாகும் - என்றும் கூறினார். (ஐ)




## டயானாவின் கார் ரூ. 30 கோடிக்கு ஏலம்!

லண்டன், ஓக. 29

பிரிட்டனின் மறைந்த இளவரசி டயானாவின் கார் 7.3 இலட்சம் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 30 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனையானது.

போர்ட் எஸ்கார்ட் வகையை சேர்ந்த அந்த கார், டயானாவிடமிருந்த பல கார்களில் ஒன்றாகும். பிர பலங்களின் பழைய கார்களை சேகரித்து வைத்திருக்கும் அல்டர்லே எட்ஜ் நிறுவனத்திடமிருந்த அந்த கார், மத்திய இங்கிலாந்தில் உள்ள வார்விக்ஷைர் நகரில் சனிக்கிழமை ஏலத்தில் விடப்பட்டது.

இதில், டுபாய், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றன. ஒரு இலட்சம் பவுண்ஸில் ஆரம்பிக்கப்பட்ட ஏலம், பலத்த போட்டிக்கிடையே 7.37 இலட்சம் பவுண்ஸில் நிறைவடைந்தது.

டயானா மறைந்த 25ஆவது ஆண்டு நினைவு தினத்துக்கு சில நாள்களுக்கு முன்னதாக இந்த ஏலம் நடைபெற்றுள்ளது.

கடந்த 1981இல் இளவரசர் சார்ள்ஸை மணந்த டயானா, பிரிட்டனின் மிகப் புகழ் பெற்ற இளவரசி யாக இருந்தார். 1996ஆம் ஆண்டில் விவாகரத்து ஏற்பட்ட பிறகு, பிரான்ஸில் அடுத்த ஆண்டு நடந்த கார் விபத்தில் அவர் தனது 36-ஆவது வயதில் பலியானார்.

# அணு ஆயுதப் பரவல் விலக்கல் பிரகடனம் ரஷ்யாவால் நிராகரிப்பு!

மொஸ்கோ, ஓக. 29

அணு ஆயுத விலக்கல் தொடர்பாக ஐ. நாவில் உருவாக்கப்பட்ட கூட்டு பிரகடன அறிக்கையை ரஷ்யா நிராகரித்துள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் 191 நாடுகள் கையொப்ப மிட்டுள்ளன. அந்த நாடுகள், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறைகூடி அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்வது வழக்கம்.



அந்தக் கூட்டத்தில் பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு கூட்டுத் தீர்மானம் உருவாக்கப்பட்டு, அது வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அந்த வகையில், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்த மறு ஆய்வுக் கூட்டம் ஐ.நாவில் இந்த மாதம் 1ஆம் திகதியிலிருந்து நடைபெற்று வந்தது. இதன்போது உருவாக்கப்பட்ட வரைவுத் தீர்மானத்தை ரஷ்யா வெள்ளிக்கிழமை இரத்து செய்தது. அந்த வரைவுத் தீர்மானத்தில், உக்ரைன் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள ஜபோரிஜியா அணு மின் நிலையம் குறித்து கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆட்சேபம் தெரிவித்து தீர்மானத்தை ரஷ்யா நிராகரித்தது.

அணு ஆயுதப் பரவல் விலக்கல் தொடர்பாக ஐ.நா.வில் முன்வைக்கப்பட்ட இறுதி வரைவு தீர்மானம் தொடர்பாக ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. ரஷ்யா மட்டுமன்றி மேலும் பல நாடுகள் வரைவுத் தீர்மானத்தில் இடம் பெற்றுள்ள அம்சங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தன என ரஷ்ய வெளியுறவுத் துறையின் ஆயுதப் பரவல் தடுப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாட்டுப் பிரிவு இணை பணிப்பாளர் இகார் விஷ்னெவெட்ஸ்கி தெரிவித்தார்.

அணு ஆயுதப் பரவல் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள 191 நாடுகளுமே ஆதரவு தெரிவித்தால் மட்டுமே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24-ஆம் திகதி படையெடுத்தது. அந்த படையெடுப்பின் தொடக்கத்திலேயே, தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஜபோரிஜியா நகருக்குள் நுழைந்த ரஷ்யப் படையினர், அங்குள்ள அணு மின் நிலையத்தைக் கைப்பற்றினர்.

ஐரோப்பாவின் மிகப் பெரிய அணுசக்தி மையமான அந்த மின் நிலையம், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான சண்டையில் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகி வருவது சர்வதேச அளவில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அந்தத் தாக்குதல்களுக்கு ரஷ்யா தான் காரணம் என்று உக்ரைனும், உக்ரைன்தான் காரணம் என்றும் ரஷ்யாவும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன. இந்தச் சூழலில், அணு ஆயுத விலக்கல் தொடர்பான கூட்டுப் பிரகடன தீர்மானத்தில் ஜபோரிஜியா அணு சக்தி மையத்தில் இராணுவ நடவடிக்கைகள் குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து, அந்தத் தீர்மானத்தை ரஷ்யா தற்போது நிராகரித்துள்ளது. (ஐ)

சீனாவின் யுத்த அச்சுறுத்தலுக்குள்ளும்

## தாய்வான் நீரிணையில் அமெரிக்க போர் கப்பல்கள்!

நியூயோர்க், ஓக. 29

அமெரிக்காவின் இரண்டு கடற்படை போர்க்கப்பல்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தாய்வான் நீரிணையில் சர்வதேச கடல் வழியாக பயணம் செய்தன.

சீனா தனது நாட்டின் ஒரு பகுதியாகக் கருதும் தாய்வானுக்கு அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி சென்றமையைத் தொடர்ந்து சீனா ஆத்திரமடைந்தது. இந்நிலையில், அமெரிக்க போர்க் கப்பல்கள் தாய்வான் நீரிணையில் சர்வதேச கடல் வழியாக பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்.

சான்செலர்ஸ்வில்லே மற்றும் ஆண்டிடெம் ஆகிய கப்பல்கள் வழக்கமான பயணத்தை மேற்கொண்டன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தாய்வான் ஜலசந்தியூடான பயணத்துக்கு வழக்கமாக எட்டு முதல் 12 மணிநேரம் வரை எடுக்கும். இந்தப் பயணங்கள் சீன இராணுவத்தால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும்.

சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்க போர்க் கப்பல்கள் மற்றும் சில சமயங்களில் பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நட்பு நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் வாடிக்கையாக நீரிணை வழியாக பயணித்து வருகின்றன. இது சீனாவை ஆத்திரத்துக்கு உள்ளாக்கி வருகிறது.

ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் பெலோசியின் தாய்வான் பயணம் சீனாவை கடும் ஆத்திரமடையச் செய்தது. தனது உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட முயற்சிப்பதாக சீனா கண்டித்தது. அத்துடன், தாய்வானுக்கு அருகே தீவிர இராணுவ பயிற்சியை சீனா தொடங்கியது.

இவ்வாறான நிலையிலேயே அமெரிக்காவின் இரண்டு போர்க்கப்பல்கள் தாய்வான் நீரிணை வழியாக நேற்று பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இந்த கப்பல்கள் எந்தவொரு நாட்டுக்கும் சொந்த மற்ற சர்வதேச கடல் வழியாகவே பயணித்ததாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க போர்க் கப்பல்கள் தெற்கு திசையில் பயணிப்பதை தனது படைகள் கவனித்து வருவதாகவும் நிலைமை சாதாரணமாகவே உள்ளது என்றும் தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## பிரிட்டனில் 80 சதவீதம் உயர்ந்தது மின் கட்டணம்!

லண்டன், ஓக. 29

பிரிட்டனில் மின்சாரம், எரிவாயு விலை 80 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. உக்ரைன் போர் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. குறிப்பாக ரஷ்யாவிடம் இருந்து இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய், உணவு தானியங்கள், உரம் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக பிரிட்டனில் இயற்கை எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது. அந்த நாட்டில் 73 சதவீத மின்சாரம் இயற்கை எரிவாயு மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

அணு சக்தி, சூரிய சக்தி, நீர்மின் சக்தி மூலம் 30 சதவீதமும், கழிவுகளில் இருந்து 10 சதவீதமும் நிலக்கரி மூலம் ஒரு சதவீதமும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்கான இயற்கை எரிவாயு விநியோகத்தை ரஷ்யா முழுமையாக நிறுத்தியதால் பிரிட்டன் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அந்த நாட்டின் எரிசக்தி ஒழுங்குமுறை அமைப்பான ஆப்ஜெம் மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலையை 80 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

தற்போது மின்சார நுகர்வோர் ஓராண்டுக்கு சராசரியாக இலங்கை மதிப்பில் 6.4 இலட்சம் ரூபாயை கட்டணமாக செலுத்தி வருகின்றனர். கட்டண உயர்வால் ஆண்டுக்கு 11.6 இலட்சம் ரூபாய் கட்டணமாக செலுத்த நேரிடும். இதன் காரணமாக பிரிட்டனில் 84 சதவீத மக்கள் நேரடியாக பாதிக்கப்படுவார்கள். (ஐ)

## லிபிய கிளர்ச்சியாளர்கள் மோதல் 23 பேர் உயிரிழப்பு; 140 பேர் காயம்!

திரிபோலி, ஓக. 29

லிபியா தலைநகர் திரிபோலியில் இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே நேற்று சனிக்கிழமை வெடித்த கடும் மோதலில் குறைந்தது 23 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 140 பேர் காயமடைந்தனரென லிபிய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

லிபியாவில் நீடித்துவரும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் இரு வருடங்களாக நிலவிய ஓரளவு அமைதிக்குப் பின்னர் நாடு மீண்டும் வன்முறைப் பாதையை நோக்கி நகர்வதைக் குறிக்கும் வகையில் இந்த மோதல் அமைந்துள்ளது.

வட ஆபிரிக்காவில் உள்ள லிபியாவில் நீண்டகாலமாக உள்நாட்டு போர் நீடித்து வருகிறது. இங்கு உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அரசு படைகளுக்கும் கலிபா ஹப்டர் தலைமையிலான கிளர்ச்சி படையினருக்கும் சண்டை நடந்து வருகிறது. இந்த மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொது மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இதனிடையே, லிபியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுக்களுக்கு இடையே அவ்வப்போது மோதல் அரங்கேறி வருகிறது. இந்நிலையில், ஹைதம் தஜோரியின் திரிபோலி விடு தலை பிரிவு கிளர்ச்சியாளர்களுக்கும் அப்தில் கானி அல் கில்கி தலைமையிலான கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தலைநகர் திரிபோலியில் நேற்றுமுன்தினம் திடீரென மோதல் வெடித்தது.


கிளர்ச்சியாளர்களின் இரு தரப்புக்கு இடையே நடந்த இந்த மோதலில் 23 பேர் உயிரிழந்தனர். 140பேர் படுகாயமடைந்தனர். (ஐ)

## சனக்கூட்டத்துக்குள் லொறி புகுந்ததில் மூவர் உயிரிழப்பு

நெதர்லாந்தில் நேற்று துயரம்

ஆம்ஸ்டர்டாம், ஓக. 29

நெதர்லாந்து - ரோட்டர்டாம் பகுதியில் மக்கள் கூட்டத்துக்குள் சரக்கு ஏற்றிச் செல்லும் லொறி வேக மாக நுழைந்து பலரை மோதித் தள்ளியதில் 3 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.



நேற்று ஞாயிற்றுக்கிழமை ரோட்டர்டாம் நகரில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நியுவ் பெய்ஜர்லாந்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. லொறி ஓட்டுநர் ஏன் கூட்டத்திற்குள் வேகமாகச் சென்றார்? என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது குறித்த விசாரணைகள் முழு வீச்சில் இடம்பெற்று வருவதாக ரோட்டர்டாம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஆசிய கிண்ண கிரிக்கெட்

# ஆப்கானிஸ்தானிடம் வீழ்ந்தது இலங்கை!



டுபாய், ஓக. 29

ஆப்கானிஸ்தான் அணியிடம் இலங்கை அணி 8 விக்கெட்களால் தோல்வியடைந்து அதிர்ச்சி அளித்தது. ஆப்கானிஸ்தான் அணியிடம் இலங்கை அணி அடைந்த முதல் தோல்வி இதுவாகும்.

ஆசியக் கிண்ணப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கின்றன. இதில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு டுபாய் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நடந்த போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

106 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 10.1 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து வெற்றி பெற்றது.

அந்த அணிக்கு தொடக்கம் கொடுத்த ஹஸ்ரத்துல்லா ஸஸாய், ரஹ்மானுல்லா குர்பாஸ் அதி ரடியாக ஆடினர். இருவரும் பவர் பிளேயில் 83 ஓட்டங் களைப் பகிர்ந்தனர்.

எனினும் 7ஆவது ஓவரில் வனிந்து ஹசரங்க டி சில்வா வீசிய முதல் பந்தில் குர்பாஸ் 40 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். இதனைத் தொடர்ந்து, இப்ராஹிம் ஸத்ரான் 15 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆனார்.

மஹீஷ் தீக்ஷனவின் பந்தை ஹஸ்ரத்துல்லா ஸஸாய் ஓங்கி அடித்தபோது பந்து நேராக சென்று தீக்ஷனவின் கையில் உராய்ந்தவாறு மறுபக்க விக்கெட்டை நேரடியாக பதம் பார்த்தது. அப்போது ஸ்தரான் ஒரு மீற்றருக்கு வெளியே இருந்ததால் ரன்அவுட் ஆனார்.

ஆனால், அடுத்த ஓவரில் ஹஸ்ரத்துல்லா ஸஸாயும் நஜிபுல்லா ஸத்ரானும் ஆப்கானிஸ்தானின் வெற்றியை உறதிசெய்தனர். ஹஸ்ரத்துல்லா ஸஸாய் 37 ஓட்டங்களுடனும் நஜிபுல்லா ஸத்ரான் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 19.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

மிக மோசமாக துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை 2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 5 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

முதலாவது ஓவரை வீசிய பஸால்ஹக் பாறூக்கி 5ஆவது, 6ஆவது பந்துகளில் குசல் மெண்டிஸ் (2), சரித் அசலங்க (0) ஆகியோரை ஒரே மாதிரி எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இரண்டாவது ஓவரில் நவீன் உல் ஹக்கின் பந்துவீச்சில் பத்தும் நிஸங்க 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். (5 - 3 விக்.) துடுப்பாட்டவரிசையில் 4ஆம் இலக்கத்துக்கு பின்தள்ளப்பட்ட வழமையான ஆரம்ப வீரர் தனுஷ்க குணதிலகவுடன் இணைந்த பானுக ராஜபக்ஷ 4ஆவது விக்கெட்டில் 44 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது முஜிப் உர் ரஹ்மானின் பந்துவீச்சில் குணதிலக 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து முஜிப் உர் ரஹ்மானின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 2 ஓட்டங்களுடனும், மொஹமத் நபியின் பந்துவீச்சில் அணித் தலைவர் தசூன் ஷானக ஓட்டம் பெறாமலும், ரன் அவுட் முறையில் பானுக ராஜபக்ஷ 38 ஓட்டங்களுடனும், ரன் அவுட் முறையில் மஹீஷ் தீக்ஷன ஓட்டம் பெறாமலும் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டமிழந்தனர். (69 - 8 விக்.),

மேலும் 6 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது மொஹமத் நபியின் பந்துவீச்சில் அறிமுக வீரர் மதீஷ பத்திரண (5 ஓட்டங்கள்) வெளியேறினார்.

தொடர்ந்து சாமிக கருணாரட்ன 31 ஓட்டங்களைப் பெற்று கடைசி வீரராக பஸால்ஹக் பாறூக்கியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தபோது இலங்கையின் மொத்த எண்ணிக்கை 105 ஓட்டங்களாக இருந்தது.

மற்றைய அறிமுக வீரர் டில்ஷான் மதுஷான் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தார். கடைசி விக்கெட்டில் ருவரும் 30 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் பஸால்ஹக் பாறூக்கி ஓர் ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 3.1 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மொஹம்மத் நபி 4 ஓவர்களில் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் முஜீப் உர் ரஹ்மான் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# அதிக விக்கெட்கள் அண்டர்சன் சாதனை!

லண்டன், ஓக. 29

இங்கிலாந்தின் அண்டர்சன் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட்கள் எடுத்த வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை படைத்தார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் மன்செஸ்டரில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட்டில் இங்கிலாந்து அபார வெற்றி.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடியது. இந்த டெஸ்டில் விளையாடும் 40 வயது இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் 950 விக்கெட்களை எடுத்து சாதனைப் படைத்துள்ளார். மெக்ராத் எடுத்த 949 விக்கெட்களை முறியடித்து சாதனை படைத்தார் அண்டர்சன்.

இங்கிலாந்து 415 ஓட்டங்கள் எடுத்தது முதல் இனிங்ஸில். 3ஆம் நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 179 ஓட்டங்களுக்கு மொத்த விக்கெட்டையும் இழந்தது. இங்கிலாந்து அணி 89 ஓட்டங்கள் மற்றும் இனிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தற்போது தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. சி. சி. போட்டி உரிமையை கைப்பற்றியது டிஸ்னி ஸ்ரார்

புதுடில்லி, ஓக. 29

2024-2027 ஆம் ஆண்டு வரை சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி) சார்பில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை இந்தியாவில் ஒளிபரப்பும் உரிமத்தை டிஸ்னி ஸ்ரார் கைப்பற்றியுள்ளது.

2024-2027 வரை ஐ. சி. சி. சார்பில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை இந்தியாவில் ஒளிபரப்பும் உரிமத்தை ஏற்கனவே டிஸ்னி பெற்றிருந்தது. அடிப்படை கட்டணமாக 40 ஆயிரத்து 250 கோடி ரூபாய் (இலங்கை மதிப்பில்) ஐ. சி. சி. நிர்ணயித்த நிலையில், இரு மடங்கு அதிக தொகை கொடுத்து சுமார் 84 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளது டிஸ்னி ஸ்ரார். (ஐ)

# பிறீமியர் லீக் உதைபந்து ஆர்சனல் அணி வெற்றி!

லண்டன், ஓக. 29

2022- 23 ஆம் ஆண்டுக்கான பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது நடக்கின்றன.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆர்செனல் - புல்ஹாம் அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் போராடியும் கோல் அடிக்க முடியவில்லை. இதனை தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது பாதியில் புல்ஹாம் அணியின் அலெக்ஸ்சாண்டர் 56ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

இதற்கு பதிலடி கொடுக்க 64ஆவது நிமிடத்தில் ஆர்செனல் அணியின் மார்ட்டின் கோல் அடித்தார். இதனால் ஆட்டம் சமநிலையானது. பின்னர் தீவிரமாக விளையாடிய ஆர்செனல் அணியின் வீரர்கள், 86ஆவது நிமிடத்தில் அந்த அணியின் கேப்ரியல் கோல் அடித்தார். இதனால் ஆட்ட நேர முடிவில்



2-1 என்ற கோல் கணக்கில் அர்செனல் அணி வெற்றி பெற்றது.

# இந்தியா மீதான தடை நீங்கியது!

புதுடில்லி, ஓக. 29

அகில இந்திய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மீதான தடையை பிபா நீக்கியுள்ளது. இதன்காரணமாக திட்டமிட்டபடி மகளிர் உலகக் கிண்ணம் இந்தியாவில் நடக்கவுள்ளது.

இந்திய கால்பந்து கூட்டமைப்பில் 3ஆம் தரப்பினர் தலையீடு இருப்பதாகக் குற்றம்சாட்டி சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (பிபா), அனைத்திந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்புக்கு சில தினங்களுக்கு முன் இடைக்கால தடை விதித்து.

மேலும், இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பின் நிர்வாகக் குழு அமைப்பு கலைக்கப்பட்டு அனைத்து இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின் கீழ் இந்திய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனைத்து தினசரி நிர்வாகக் கட்டுப்பாடுகளும் வருகிறதோ அன்று தடை நீங்கும் என்று பிபா அறிவித்திருந்தது.

இந்தத் தடை உத்தரவு காரணமாக 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரை நடத்தும் உரிமையை இந்தியா இழக்கும் நிலை உருவானது. இந்தத் தொடர், வரும் ஒக்ரோபர் 11 முதல் 30-ம் தேதி வரை இந்தியாவின் 3 நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இரண்டு வார இடைவெளிக்கு பிறகு இந்திய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மீதான தடையை பிபா நீக்கியுள்ளது. (ஐ)

# அடக்குமுறைகளை செய்யும் அரசுக்கு சர்வதேச ஆதரவு எவ்வாறு கிடைக்கும்?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, ஓக. 29

**நாட்டிலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார். ஒரு புறம் ஆர்ப்பாட்டக்காரர்களை வேட்டையாடிக் கொண்டு, மறுபுறம் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்கப் பெறுவது சந்தேகத்திற்குரியது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மக்களுக்காக போராட்டங்களில் ஈடுபட்டவர்களை வேட்டையாடிக் கொண்டிருக்கும் அதேவேளை, மறுபுறம் ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறைகளையும் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டிலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார். நாட்டு மக்களுக்காக போராடிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்துக் கொண்டு எவ்வாறு சர்வதேச சத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்?

சர்வதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இலங்கையில் ஊடக சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் எமக்கு சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்கப் பெறுமா, இல்லையா என்பது சந்தேகத்திற்குரியதே. தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நகைப்புக்குரிய வகையிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சிறு பிள்ளைகள்கூட செயல்படாத வகையிலேயே அரசாங்கத்தின் செயல்பாடுகள் காணப்படுகின்றன. நாட்டைப் பற்றி சிந்தித்து செயல்பட வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு காணப்படுகிறது.

பக்க சார்பற்ற ஊடகங்களால் முன்னெடுக்கப்படும் விமர்சனங்களை தவறாக புரிந்து கொள்ளாமல் , தமது செயற்பாடுகளை அரசாங்கம் மாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக அந்த விமர்சனங்களை கோபத்துடன் பார்க்கக் கூடாது.

அரசாங்கத்துக்கு எதிரான ஊடக நிறுவனங்களை முடக்கச் செய்வதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். மக்களுக்குள்ள அடிப்படை உரிமைகளை மீறும் அதிகாரம் அரசாங்கத்துக்குக் கிடையாது. அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய காலம் உத யமாகியுள்ளது. அதற்கு தலைமை வகிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம் - என்றார். (ஐ)

# பாதுகாப்பற்ற முறையில் வசித்த சிறுமிகள் மீட்பு!

கொழும்பு, ஓக. 29

பொலநறுவை மெதிரிகிரிய பிரதேசத்தில், வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் வசித்த இரு சிறுமிகளை மெதிரிகிரிய பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

9 மற்றும் 4 வயது சிறுமிகளையே பொலிஸார் இவ்வாறு பொறுப்பேற்றுள்ளனர்.

சிறுமிகளின் தாயார் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் கணவரையும் பிள்ளைகளையும் கைவிட்டு சென்றுள்ளார். தந்தையின் பராமரிப்பில் பாட்டியின் வீட்டில் சிறுமிகள் வசித்து வந்தனர்.

இந்நிலையில், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட பாட்டியை சிறுமிகளே பராமரித்துள்ளனர். இந்நிலையில், பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அந்த வீட்டுக்கு பொலிஸார் சென்றனர்.

வாழ்வதற்கு பொருத்தமற்ற வகையில் அந்த வீடு காணப்பட்டதுடன், குப்பையாகவும் காணப்பட்டது. அத்துடன் ஒழுங்கான உணவும் சிறுமிகளுக்கு கிடைக்கவில்லை. இந்நிலையில், அவர்களை மீட்ட பொலிஸார் அவர்களுக்கு உணவும் கல்வி கற்பதற்கு தேவையான உதவிகளையும் செய்து நடவடிக்கை எடுத் தனர். (கே)

# சடலம் கரையொதுங்கியது!

கொழும்பு, ஓக. 29

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டம்பகஹ வத்த பிரதேசத்தில், அடையாளம் காணப்படாத ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 35 மற்றும் 40 வயது மதிக்கத்தக்க 5 அடி 6 அங்குலம் உயரமுடைய ஒருவரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

சடலம், பிரேத பரிசோதனைக்காக நாகொடை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# பொருட்கள் இறக்குமதிக்கான தடை; டொலர் இருப்பு பிரச்னைக்கு தீர்வல்ல!

கொழும்பு, ஓக. 29

தேசிய தொழில்துறையை முழுமையாக இல்லதொழிக்கும் வகையில் 300இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட வேண்டும். இறக்குமதியை தவிர்ப்பது வெளிநாட்டு கையிருப்பு பிரச்னைக்கு தீர்வாக அமையாது என இலங்கை ஐக்கிய வர்த்தகர் சங்கத்தின் தலைவர் டானியா அபேசுந்தர தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை காரணமாக கடந்த 24ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 300இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளன. அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

பல்வேறு காரணிகளால் மோசமான நெருக்கடியியை எதிர்கொண்டுள்ள தேசிய தொழிற்துறையை முழுமையாக இல்லாதொழிக்கும் வகையில் பொருட்கள் இறக்குமதி மீதான தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தினால் ஆடைத்தொழிற்துறை பெரும் நெருக்கடியை எதிர்க்கொள்ள நேரிட்டுள்ளது. ஆடைத்தொழில்துறையில் பல மில்லியன் கணக்கானோர் சேவையாற்றுகிறார்கள். மின்கட்டணம் மற்றும் சேவை கட்டண அதிகரிப்புக்கு மத்தியில் சேவை தொழிற்துறையை நெருக்கடியான சூழ்நிலையிலும் முன்னெடுத்து செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. 300இற்கும் அதிகமான பொருட்கள் இறக்குமதி மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

# மே 9 வன்முறைகளுடன் தொடர்பு மேலும் மூன்று பேர் கைதாகினர்!

கொழும்பு, ஓக. 29

மே 9 வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே 9 ஆம் திகதி நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர், இடம்பெற்ற வனமுறைகளின்போது பாராளுமன்ற உறுப்பினர்களான மிலான் ஜயதிலக, லசந்த அழகியவண்ண, அருந்திக பெர்னாண்டோ ஆகியோரின் வீடுகள், வாகனங்கள் மற்றும் பணிமனைகள் உட்பட சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் குறித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 53, 26, 30 வயதுடைய கிரிந்திவெல, ஊரபொல மற்றும் விஹினியாகம பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேல் மாகாண குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் தங்கொட்டுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



### எமது...

அத்துடன், தமிழ் மக்களுக்கு இன ரீதியான பிரச்சனைகள் எவையும் இருக்கின்றன என்று நான் கருதவில்லை. நியாயமான பிரச்சனைகள் எவையேனும் இருப்பின், அவற்றுக்கு உரியவாறான தீர்வு வழங்கப்பட வேண்டும். பொதுமன்னிப்பு என்ற விடயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமன்றி, இராணுவத்தினருக்கும் பொருந்தக்கூடியதாக அமைய வேண்டும் என்றும் கூறியிருக்கிறார் அவர்.

நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் - மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் முன்மொழிவு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு சாட்சியமளித்த அவர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எனது விடயத்தில், உள் நோக்கத்துடன் பக்கச்சார்பாக நடந்து கொண்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை சில தமிழ்க் கட்சிகள் அரசியல் நோக்கங்களுக்காக தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொண்டன.

இதுவரையில் இயங்கிய ஆணைக்குழுக்களில் பெரும்பாலானவை அதனை ஒரு 'வேலையாக' கருதி செயல்பட்டனவே தவிர, அவற்றின் முன்னிலையில் வழங்கப்படும் வாக்குமூலங்கள் தொடர்பில் ஆராய்ந்து, உண்மையைக் கண்டறியும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதே எனது நிலைப்பாடு.

இதேபோன்று பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே எமது கட்சியின் கொள்கையாகும். ஆனால் சக தமிழ்க் கட்சிகள் பிரச்னைகள் தொடர்பில் பேசிப்பேசி அவற்றை மேலும் பூதாகரமாக்குவதையே கொள்கையாக வைத்திருக்கின்றன. தமிழ் ஊடகங்களும் சரியான தகவல்களை மக்களிடம் சேர்ப்பதைவிடுத்து, பிரச்னைகளைத் தீவிரமடையச் செய்திருக்கின்றன.

இன்றளவில் தமிழ்மக்களுக்கு இனரீதியான பிரச்சனைகள் எவையும் இருக்கின்றன என்று நான் கருதவில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சனைகள் எவையேனும் இருப்பின், அவற்றுக்கு உரியவாறான தீர்வு வழங்கப்படவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசமைப்பு உருவாக்கம் சாத்தியமற்ற தொன்றாகும். 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபை முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இப்போது சிறந்த தீர்வாக அமையும்.

### கோட்டாபயவுக்கு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்பவுள்ளார். நாடு திரும்பவுள்ள அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இரு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். அரசமைப்பின் பிரகாரம் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், அதிகார பூர்வ இல்லம் வழங்கப்பட வேண்டும் என்பனவே அவரின் கோரிக்கைகள்.

இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதிக்கு உரிய பாதுகாப்பு அவருக்கு வழங்கப்படும் என்றும் அதிகாரபூர்வ இல்லத்தை வழங்குவதில் சிக்கல் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும், முன்னாள் ஜனாதிபதிக்கு பௌத்தலோக மாவத்தையில் அதிகாரபூர்வ வீடு ஒன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த வீடு நாமல் ராஜபக்ஷ எம். பியின் வீட்டுக்கு அண்மையாக அமைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, இது தொடர்பில் முன்னாள் உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, பதவியை விட்டு வெளியேறியதன் பின்னர், முன்னாள் அரச தலைவர் ஒருவருக்குக் கிடைக்கும் எந்தவொரு சலுகையையும் பெற்றுக் கொள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உரிமையில்லை என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

பொது மன்னிப்பு என்ற விடயம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமின்றி, அது இராணுவத்தினருக்கும் பொருந்தக்கூடியதாக அமையவேண்டும். போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருதலைப் பொறுத்தமட்டில், அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான தினத்தையும் இடத்தையும் தெரிவுசெய்து வழங்கமுடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்குரிய இழப்பீடு, வாழ்வாதாரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதுடன் இறப்புச்சான்றிதழைக் கோருவோருக்கு அதனை வழங்கமுடியும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

### பரிவர்த்தனைப்...

மதிகள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. குறிப்பாக, இந்தியாவுடனான வர்த்தகங்களும் பாதிப்படைந்துள்ளது. இதை சீர் செய்யு முகமாக மத்திய வங்கி இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது.

ஆகவே, தமிழர் தரப்பு தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் வர்த்தக நடவடிக்கைகளில் சுலபமாக ஈடுபடுவதற்கு இது வழியமைக்கிறது. நமக்குத் தேவையான மருத்துவ பொருட்களிலிருந்து அத்தியாவசிய தேவைகள், உணவு, உடை என சகல விடயங்களையும் தருவித்துக் கொள்வதற்கும் ஏற்றுமதி செய்து கொள்வதற்கும் வர்த்தக ரீதியான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இதனை ஒரு வரப்பிரசாதமாக தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பூகோள ரீதியாக எமக்கு அண்மையில் உள்ள பெரிய சந்தையாக இந்தியா அமைந்துள்ளது. சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் இந்த சந்தை வசதியைப் பயன்படுத்துகிறார்கள்.

நாம் இதை முழுதாகப் பயன்படுத்த முயல வேண்டும். வர்த்தக முதலீடுகள் மற்றும் நடவடிக்கைகளை விஸ்தரித்து எமது பொருளாதார நிலையை வளப் படுத்தும் சந்தர்ப்பமாக இதை வர்த்தக, முதலீட்டு, உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிக்கான பாதையாக எமது சமூகம் கையாள வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

### பாதுகாப்பு...

இது தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திருமதி ரோஹிணி மாரசிங்க மற்றும் ஆணையாளர் கலாநிதி நிமல் கருணாசிறி ஆகியோர் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

அந்தக் கடிதத்தில், முன்னாள் ஜனாதிபதி சட்ட ரீதியாக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய ஒருவர். ஆனால், அவர் பாதுகாப்பு உத்தரவாதமின்றி நாடு திரும்ப முடியாமல் இருக்கிறார் என்று எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் நாடு திரும்ப தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

### க. பொ. த....

மற்றும் www.results.exams.gov.lk ஆகிய இணையத்தளங்கள் மூலம் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு தோற்றிய 2 இலட்சத்து 72 ஆயிரத்து 682 மாணவர்களில் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 497 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர். இது பரீட்சைக்கு தோற்றியவர்களின் எண்ணிக்கையில் இது 62.9 வீதமாகும்.

இதேசமயம், 37 பாடசாலை விண்ணப்பதாரர்கள் மற்றும் 12 தனியார் விண்ணப்பதாரர்கள் உட்பட 49 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 29

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதில் நேற்றிரவு கிடைத்த யாழ்ப்பாணம் மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகளின் விவரம் வருமாறு,

கணிதப் பிரிவு, தொழில்நுட்ப விஞ்ஞானப் பிரிவிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, உயிரியல் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மாவட்டத்தில் முதல் இரு இடங்களையும் பிடித்தனர்.

கலைப் பிரிவில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ஐ)

# எரிபொருள் இறக்குமதி - விற்பனை 24 சர்வதேச நிறுவனங்கள் ஆர்வம்!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன



கொழும்பு, ஓக. 29

இலங்கைக்கு எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் 10 நாடுகளை சேர்ந்த 24 நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன என்று வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று தெரிவித்தார்.

நீண்டகால ஒப்பந்தங்களில் கீழான இறக்குமதி மற்றும் விநியோகத்துக்கு பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிறுவப்பட்ட புகழ்பெற்ற நிறுவனங்களிடம் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு அமைச்சு அண்மையில் அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கமைய, இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனை செய்வதற்கான முன்மொழிவுகளை 10 நாடுகளை சேர்ந்த 24 நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தியா, சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், மலேசியா, நோர்வே மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களே இவ்வாறு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

இந்த முன்மொழிவுகளை அமைச்சு மதிப்பீடு செய்து ஆறு வாரங்களில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து சர்வகட்சி அரசாங்கம் அமைப்போம்!

## சிறீலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஓக. 29

சுதந்திரக் கட்சி, இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து முறையான சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கவுள்ளதாக சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மஹரகமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தை மொட்டு கட்சித் தலைவர்களே வழிநடத்துகின்றனர். சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை.

ஆகையால் எதிர்காலத்தில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து ஸ்திரமான சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம் - என்று அவர் கூறினார். (ஐ)

### யாழ். மத்திய...

இவர், கணிதப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் 15ஆவது இடத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### யாழ். இந்து...

இவர் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ஐ)

### மீசாலை...

விஞ்ஞானப் பிரிவில் ஒருவரும், வணிகப் பிரிவில் ஒருவரும், கலைப் பிரிவில் 10 மாணவர்களும் 3ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் முதல் நிலையை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பெற்றுள்ளது.

### பலாலியிலிருந்து...

விமானம் தமிழ்நாடு - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் என்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### உயிரியலில்...

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகியிருந்தன. இதில் உயிரியல் பிரிவில் காரைதீவை சேர்ந்த மருத்துவர்களான தமிழ்வாணன் - பகீரதி ஆகியோரின் மகன் துவாரகேஷ் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார். (ஐ)

### யாழ். இந்துக்...

பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் 26 மாணவர்கள் 3 ஏ சித்தியையும், 7 மாணவர்கள் 2 ஏ, பி சித்தியையும் உயிரியல் பிரிவில் 13 மாணவர்கள் 3 ஏ சித்தியையும், 10 மாணவர்கள் 2 ஏ, பி சித்தியையும் பெற்றனர்.

இதேபோன்று வர்த்தகப் பிரிவில் ஒரு மாணவர் 3 ஏ, 2 மாணவர்கள் 2 ஏ, பி சித்தியையும், பிற பாடங்களல் தோற்றிய ஒரு மாணவர் 3 ஏ சித்தியையும் மற்றோர் மாணவர் 2ஏ, பி சித்தியையும் பெற்றுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; மேலும் 91 கோடி ரூபாய் இழப்பீடு

கொழும்பு, ஓக. 29

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு இழப்பீடாக மேலும் 91.1 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தக் கப்பலின் காப்புறுதி நிறுவனத்தினால் இந்த இடைக்கால இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் அந்தக் காப்புறுதி நிறுவனத்தால் இரண்டு தடவைகள் இடைக்கால இழப்பீட்டு தொகையாக 34. 8 கோடி ரூபாய், 33. 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

அதற்கமைய கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள 15 ஆயிரத்து 32 மீனவர்களுக்கு இந்த தொகை பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் அவர்களின் படகுகளின் வகைகள், மீன் பிடிக்கும் முறை மற்றும் இழந்த வருமானம் என்பவற்றின் அடிப்படையில் 80 ஆயிரம் ரூபாய் முதல் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வரையில் நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். மாநகர சபைக்கு ஜப்பான் அளித்த நிதி திரும்பி சென்றது!

## அரசு அனுமதி அளிக்காததே காரணம்

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாநகர சபைக்கு ஜப்பான் வழங்கிய 4 கழிவகற்றும் பாரவூர்திகளை நாட்டுக்கு கொண்டுவரும் திட்டத்துக்கு அப்போதைய கோட்டாபய அரசு ஒத்துழைக்காததால், பாரவூர்திகளை நாட்டுக்கு கொண்டுவர யாழ். மாநகர சபைக்கு ஜப்பான் தூதரகம் வழங்கிய 14.3 மில்லியன் ரூபாய் (அமெரிக்க டொலர் 83,432) பணத்தை திரும்ப பெற்றுள்ளது.

ஏப்ரல் 2019 இல், ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் இலாப நோக்கற்ற பிரிவான ஜப்பானிய இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கான சங்கம் (SPJD), பயன்படுத்தப்பட்ட 4 கழிவகற்றல் மற்றும் மறுசுழற்சி வாகனங்களை யாழ். மாநகர சபைக்கு வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

ஜப்பானில் வைத்து வழங்கப்படும் நான்கு வாகனங்களை இலங்கைக்கு கொண்டு வர, சுங்க அனுமதி மற்றும் உள்ளூர் போக்குவரத்து தொடர்பான செலவுகளுக்காக 14,329,446 ரூபாயை ஜப்பானிய தூதரகம், யாழ். மாநகர சபையின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டது.

எனினும், தூதரகம் நேரடியாக மாநகரசபையின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்ட இந்த பணத்தை, யாழ். மாநகர சபை பயன்படுத்த, நிதியமைச்சு அனுமதி மறுத்து விட்டது.

இது குறித்து யாழ். மாநகரசபை பலமுறை கோரிக்கை விடுத்தும் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை. 3 வருடங்களுக்கு மேலாக திட்டம் தாமதமானதால், அந்த நிதியை மீளப்பெறுவதாக ஜப்பான் தூதரகம், யாழ். மாநகர சபைக்கு அறிவித்தது. இதற்கான ஆவணங்கள் இரு தரப்பினாலும் இறுதி செய்யப்பட்டு, பணம் மீளப்பெறப்பட்டுள்ளது.

அரசின் முட்டுக்கட்டையால் யாழ். மாநகர சபைக்கு கிடைக்கவிருந்த 4 கழிவு மறுசுழற்சி வாகனங்கள் கிடைக்காமல் போயுள்ளன என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# கொரோனாவுக்கு இருவர் மரணம்!



கொழும்பு, ஓக. 29

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் கொரோனா தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 60 வயதுக்கு மேற்பட்ட இரு ஆண்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வடக்கு - கிழக்கு இணைந்ததான இடைக்கால நிர்வாகமே தேவை!

## சிறீதரன் எம். பி. வலியுறுத்து

கிளிநொச்சி, ஓக. 29

**பொருளாதார ரீதியில் விழுந்து கிடக்கின்ற வடக்கு - கிழக்கு தமிழர்களுடைய பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு, தற்காலிகமாக ஓர் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கினால், அதிலும் வடக்கு - கிழக்கு இணைந்ததாக உருவாக்கப்பட்டு அதனை உலக வங்கி அல்லது ஐ. எம். எவ். அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய நேரடி நெறிப்படுத்தலில் நிதிக்கையாளுகைகள் உருவாக்கப்பட வேண்டும் -என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பில் பல்வேறு பேச்சுக்கள் இடம்பெறும் நிலையில், அண்மையில் தடை நீக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் ஏதும் முன்னெடுக்கப்பட்டனவா என்று ஊடகவியலாளர் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இடைக்கால நிர்வாகம் குறித்து தற்போது பல்வேறு தரப்பினரும் பல்வேறான கருத்துக்களை கூறி வருகின்றனர். இடைக்கால நிர்வாகம் என்பதற்கு நாங்கள் பல்வேறு அனுபவங்களைக் கொண்டவர்கள். ஏற்கனவே, 1987ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசுகள் செயல்பட்டுக் கொண்டிருந்ததன் அடிப்படையில், ஓர் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டது.

அந்த இடைக்கால நிர்வாகம் எழுத்துருவுடன் முடிவு பெற்றது. காரணம், அந்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆசனங்கள், மற்றும் இந்திய அரசினால் கொண்டுவரப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈ.டி.என்.ரி.எல்.எவ் ஆகியவற்றுக்கு ஆசனங்கள் எத்தனை அதனைவிட தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எத்தனை ஆசனங்கள் என்ற அடிப்படையில் இவ்வாறு இடைக்கால அரசாங்கம்



முன்மொழியப்பட்டது.

அவ்வாறான இடைக்கால நிர்வாகத்துக்கான தலைவர்களுக்கு மூன்று தலைவர்களின் பெயர் முன்மொழியப்பட்டது. மட்டக்களப்பு மண்ணைச்சேர்ந்த பத்மநாதன் மற்றும் ரமேஷ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சீ. வீ. கே. சிவஞானம் ஆகிய மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்ட நிலையில், சீ. வீ. கே. சிவஞானத்தை ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவு செய்ததில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவும், இந்த இடைக்கால நிர்வாகம் இடையில் செயலிழந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன் பின்னர் சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் சந்திரிகா அம்மையாரின் எல்லைமீறிய அதிகார வரம்பு செயல்பாடுகளால் அந்த சுனாமி கட்டமைப்பும் செயற்பட முடியாமல் கிடப்பில் போடப்பட்டது. சுனாமி கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது உலக வங்கியின் ஆதரவு இருந்தது.

நிதிகளை கையாள்வதற்கான முறையான கட்டமைப்பு உலக வங்கியின் கண்காணிப்பில் இருந்தது. அதற்கு முன்னர் இந்தியாவின் உருவாக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் இந்தியாவின் மேற்பார்வையுடன் உருவாக்கப்பட்டது.

தற்பொழுது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பில் கருத்துக்களை தெரிவித்து, அதற்கு அனைவரும் இணைந்து செயல்படவருமாறு அழைப்பது தொடர்பில் பத்திரிகைகளில் பார்க்கின்றோம். இந்த விடயம் தொடர்பில் கடந்த மே மாதமே பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துரையாடியிருந்தோம்.

கடந்த 3ஆம் திகதி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்தில் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது தொடர்பில் பரிந்துரை ஒன்றை நான் முன்வைத்திருந்தேன். அது தொட்பில் பரிசீலிக்கலாம் என்ற செய்தி அங்கு சொல்லப்பட்டிருந்தது.

இப்போது, தன்னால் எதுவும் செய்ய முடியாது, தன்னுடைய இயலுமையை இழந்துகொண்டு செல்கின்ற டக்ளஸ் தேவானந்தா, தான் இருப்பதாகவும், அக்கறை செலுத்துபவனாகவும் காட்டிக் கொள்வதற்காக அவர் இடைக்கால நிர்வாகம் பற்றி பேசுகின்றார்.- என்றார். (ஐ)

# பொலிஸ் காவலிலிருந்த சந்தேகநபர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 29

தங்கச் சங்கிலித் திருட்டு சம்பவத்தில் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட நிலையில் 27 வயது சந்தேக நபர் கிரிந்திவெல உயிரிழந்தார்.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் சென்றபோது அவர் தப்பிக்க முயன்றார் என்றும், இதன்போது கீழே விழுந்ததில் அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை யடுத்து அவருக்கு காவலாக சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவரும் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# கத்தியால் குத்தி ஒருவர் கொலை!

கொழும்பு, ஓக. 29

இருவருக்கு இடையே ஏற்பட்ட மோதல் கத்திக் குத்தில் முடிந்ததில் ஒருவர் உயிரிழந்தார்

களுத்துறை மத்துகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பின்னகொட பிரதேசத்தில், நபரொருவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பின்னகொடை - அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே இவ்வாறு கொலையானார்.

கொலை சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (கே)

# பொலிஸ் சட்ட பிரிவின் பணிப்பாளராக ருவான் குணசேகர மீண்டும் நியமனம்!

கொழும்பு, ஓக. 29

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமைகளை முன்னெடுத்திருந்த ருவான் குணசேகர, கடந்த 2019 நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலை தொடர்ந்து பொலிஸ் சட்டப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் நீதிச் சேவை பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளராக ருவான் குணசேகர நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே, பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலரின் உத்தரவின் பேரில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர மீண்டும் பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.